கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

மாதம் இருமுறை

12 - 11 - 1972

30 காசு




தனி வாழ்வுக்குத் தனிப்பெரும் தொண்டு; சமூக வாழ்வுக்குச் செவ்விய சேவை



'வாழ்வில் மனிதன் பூரண ஒழுக்கத்துடன் இருக்க வேண்டும். சிந்தனையிலும் செயலிலும் அறத்தின் வழியே நிற்க வேண்டும்' என்ற தத்துவத்தை வழிபட்டார் திருவள்ளுவர். அவர் வகுத்து விளக்கிய சமூக நெறி தனிமனிதன் கடைத்தேற உதவியதோடு சமூகம் முழுவதன் இசைவான வளர்ச்சிக்கும் வழி கூறியது. பொது வாழ்வுக்குத் தர்ம அடிப்படை அமைத்தோரிடை முதலானதோர் இடம் கொண்டார். அவரது அற்புதத் திருக்குறள் எத்தனை தலைமுறைக்கும் மனிதன் கடைத்தேறும் இரகசியத்துக்குக் கதவத்தைத் திறந்து விட்டது. தனிமனிதன் தனக்குள் பெறவேண்டிய சமநிலைக்கும், சமூகச் சூழலுடன் பெறவேண்டிய இசைவுக்கும் அது வழி காட்டுகிறது.

அவரது சமூகநெறி அன்பு நிறைந்து ததும்புவதாகும். தலையாய ஒழுக்கம் உயிரினத்தின் அனைத்து வடிவங்களையும் அன்பு செய்வதே என ஓதினார். இதனால் தான் அவரது உபதேசம் இடம் - காலம் என்கிற எல்லைகளுக்கு உயர்ந்து ஒளிர்கிறது. திருவள்ளுவரைப் போன்ற மகாபுருஷர்கள் எல்லாக் காலத்துக்கும், எல்லாத் தேசத்துக்கும் உரியவர்கள். அவர்கள் சமுதாயம், சம்பிரதாயம், இடம், காலம் இவற்றின் கட்டுக்களுக்கு மேம்பட்டவர்கள். ஈசுவர சிருஷ்டிக்குத் தொண்டு செய்து, அதுவே ஈசனுக்குத் தொண்டு என்று காட்டுவதற்காக அந்த மகா புருஷர்கள் ஜன்மம் எடுத்தனர்.

மபத்லால் க்ரூப்



சந்தா விவரம் :

தனிப் பிரதி விலை 30 காசு
ஒரு வருடம் ரூ. 7-
ஆறு மாதம் ரூ. 3-50
வெளி நாடுகள் ரூ. 18-00

(சந்தாத் தொகையை மணியார்டர் அல்லது சென்னையில் மாற்றக்கூடிய டிமாண்ட் டிராப்ட் மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். சந்தாவைச் செக் மூலம் அனுப்புவதைத் தவிர்க்கவும்.)

★

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்
-- பாரதியார்


கோகுலம்

மலர் 1
இதழ் 15

★

நவம்பர் 12, 1972
பரிதாபி ஸ்ரீ
ஐப்பசி 27உ

★



ட்டைப்படச் சிறுமி:

என் குடை அழகா,
நான் அழகா?

ணைப்படம்: ரவீந்திர பெல்லா.



ஸ்பெக்ட்ரம்
கலர் பென்சில்



குழந்தைகளின் உபயோகத்திற்காகவே, விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட வண்ண வண்ணப் பென்சில்கள் அடங்கிய அழகான பெட்டி. இப்பென்சில்கள் நீடித்து உழைப்பதோடு, இயல்பான வண்ணத்தில் பிரகாசிக்கின்றன. எத்தகைய காகிதத்துக்கும் ஏற்றவை.

தயாரிப்பாளர்கள் :

தி மதராஸ் பென்ஸில் பாக்டரி

சென்னை-1.

இன்றைய முன்னணி பிரபல

பழனி டாக்டர் எஸ். காளிமுத்து

R. M. P. (Ind.) V. V. C., A. M. I. H.

அவர்களின் விஜயம்



சந்திக்கும் விலாசங்கள்

10-ந் தேதி திருப்பத்தூர் (N. A.): சங்கர் கபே பகல் 1 மணி முதல 2-30 மணி வரை.

10-ந் தேதி ஆம்பூர் : N. A. B. லாட்ஜ், மாலை 3-30 மணி முதல் 5 மணி வரை.

11ந் தேதி வேலூர் (N.A.): அஜீஸ் மேன்ஷன்ஸ் காலை 8 மணி முதல் 11 மணி வரை.

11-ந் தேதி குடியாத்தம் : அலங்கார் லாட்ஜ் பகல் 1 மணி முதல் 3 மணி வரை.

12-ந் தேதி பெங்களூர் ஸிடி : நியூ எவரெஸ்ட் ஹோட்டல், காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை.

13-ந் தேதி கிருஷ்ணகிரி : ஸ்ரீ ராம் லாட்ஜ், காலை 8 மணி முதல் 10 மணி வரை.

13-ந் தேதி தர்மபுரி : சீனிவாசா லாட்ஜ் காலை 11 மணி முதல் 12 மணி வரை.

13-ந் தேதி சேலம் : லக்ஷ்மி ராஜபவன் லாட்ஜில், பகல் 2 முதல் 5 மணி வரை.

15-ந் தேதி ஈரோடு : நவபவனம் லாட்ஜ் காலை 8 மணி முதல் 12 மணி வரை.

15-ந் தேதி திருப்பூர் : ஸ்ரீ கிருஷ்ணா லாட்ஜில் பகல் 2 மணி முதல் 4 மணி வரை.

15-ந் தேதி பொள்ளாச்சி : ஹோட்டல் கீதாஞ்சலி, மாலை 5-30 மணி முதல் 7-30 மணி வரை.

16-ந் தேதி கோவை : விஜயா லாட்ஜ், காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை.

17-ந் தேதி சென்னை : ஹோட்டல் ஸ்ரீலேகா மாலை 3 மணி முதல் 6 மணி வரை.

18-ந் தேதி சென்னை : ஹோட்டல் ஸ்ரீலேகா காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை.


19-ந் தேதி பம்பாய் : சாரதா பவன் (மாதுங்கா), காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை.


பழனி சித்தர் வைத்தியசாலை

போன்: 316] பழனி [தந்தி: சித்தர்

ஆத்திசூடி

ராஜாஜி







தீவினையகற்று

தீவினை : பாவச் செயல்

வேறெதையும் அகற்ற வேண்டியதில்லை. அகற்ற வேண்டியது தீவினையை. வேறு ஏதும் ஒருவனுக்குப் பகையல்ல. தீவினைதான் பெரும் பகை. அதை அகற்றினால் சுகம் தானாக உண்டாகும். கஷ்டங்கள் கூடக் கஷ்டமாகத் தோன்றாது.

துன்பத்திற்கிடங்கொடேல்

முன்பு இன்பம் தருவது போல் தோன்றிப் பின் நிச்சயமாய்த் துன்பம் தரும் பழக்க வழக்கங்களுக்கு இடம் கொடாதே. முன் ஜாக்கிரதையாக இருந்து இவைகளுக்கு இடங் கொடாமல் துன்பம் உன்னைச் சேராமல் செய்து கொள். உதாரணங்கள்: நல்ல உணவு கிடைத்தபோது அதை அளவு மிஞ்சிப் புசிப்பது முதலில் இன்பமாகத் தோன்றும். பின்பு துன்பமாக முடியும். கள் குடிப்பது, பொய் பேசுவது இவையெல்லாம் இப்படியே முடியும். இடங் கொடுத்தபின் அகற்றுவது கஷ்டமாகும்.

தூக்கி வினை செய்

ஏதொரு காரியம் செய்வதற்கு முன் அதன் நன்மை தீமைப் பயன் அதற்கு வேண்டிய முயற்சி, அதற்கு வரும் இடையூறுகள் இவைகளையெல்லாம் நன்றாக ஆலோசித்துத் தெரிந்து கொண்டே அக்காரியம் செய்ய வேண்டும். யோசனையின்றிச் செய்யப் புகாதே. தூக்குதல் என்றால் வினையின் தன்மை இடையூறுகள், பயன் இவைகளையும் செய்பவனுடைய சக்தி சௌகரியங்களையும் அளவு கண்டு யோசிப்பது. தராசில் பண்டத்தின் நிறையைத் தூக்கிப் பார்ப்பது போல் நன்றாக அளவு கண்டு யோசிப்பது.

நாவல் பழத்தின் ஆவல் தீர அருளியது

கிருஷ்ணர் வீதிகளில் மாணிக்க மணிப் பதுமை அசைந்தாடுவது போல் கோபிகைகளின் முன் ஆடுவார்; அமுத மயமான இன்னிசையுடன் பாடுவார். முயல் போல் ஓடுவார். அப்பெருமானுடைய அழகிய ஆடலைக் கண்டோர் உள்ளமும் உணர்வும் உருகிக் கண்ணீர் பெருகிப் புளகாங்கிதம் அடைவார்கள்.



கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்தவாரியார்

ஒரு நாள் ஒரு பெண் நாவல் பழம் விற்றுக் கொண்டு வீதியில் வந்தாள். கண்ணன்வீட்டுக்குள் ஓடிக் கைகள் நிறையத் தானியத்தை அள்ளிக் கொண்டு வந்து, ''அம்மா! இந்தா நெல். இதை அளந்து கொண்டு நாவல் பழம் கொடு'' என்றார்.

அவள் நெல்லை ஏந்தியபோது கண்ணனுடைய கரங்களில் இருந்து நெல் மணிகள் கீழே சிந்திவிட்டன. அவள் அவற்றைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு கண்ணனுடைய கனியமுதமன்ன தேன் மொழியைக் கேட்டு மகிழ்ந்தாள். நல்ல பழங்களாகப் பொறுக்கி ஐயன் கையில் தந்தாள். கூடையிட்ட தானியங்கள் மாணிக்க மணிகளாகி விட்டன. இந்த அதிசயத்தைக் கண்ட அந்தப் பெண் திகைத்து நின்றாள். கண்ணபிரான் அவளை அருள் சுரந்து பார்த்தருளி, ''நீ சுகமாக வாழக் கடவாய்'' என்று அருள் புரிந்தார்.

ஒரு நாள் ஒரு முதிய கோபாலன் மீது ஆவேசித்து ''ஏ! ஆயர்களே! இந்தக் கிருஷ்ணனுக்குப் பூதனை, சகடாசுரன் முதலிய பல பகைவர்களால் துன்பம் வந்து விலகின. நீங்கள் எல்லோரும் பிருந்தாவனம் சென்று தேவபூசை செய்யுங்கள்'' என்று கட்டளையிட்டார்.

இதனைக் கேட்ட நந்தகோபன் முதலியோர் வண்டிகளில் பூசைக்குரிய சாதனங்களை நிறைத்துக் கொண்டு, கண்ணபிரானையும், பலராமனையும் வண்டியில் ஏற்றிக் கொண்டு, உறவினர்களும் நண்பர்களும் புடைசூழப் பிருந்தாவனத்தை அடைந்தார்கள்.

பிருந்தாவனத்தில் தெய்வ வழிபாடு செய்தார்கள். யமுனை நதியில் இராம கிருஷ்ணர்கள், மற்றப் பாலகர்களுடன் நீராடி மகிழ்ந்தார்கள். அங்கே கன்று மேய்த்துத் திரிந்தார்கள். பல விதமான விளையாடல்கள் செய்து கண்ணன் களித்தார்.

வேணுகானம்

கோபாலகிருஷ்ணர் வேய்ங்குழல் ஊதி உலகங்களையும் உவக்குமாறு செய்தார். புல்லாங்குழல் நாதத்தால் சராசரங்கள் யாவும் இன்ப வெள்ளத்தில் முழுகின. பசுவின் கன்றுகள் பெண்புலியின் மடியில் பால் குடித்தன. மயிலும் பாம்பும் மருவி விளையாடின. கீரியும் பாம்பும் ஒன்றுகூடி உவந்தன. கல்லும் புல்லும் உருகின.

கன்றால் விளா வெறிந்தது

கம்சனுடைய கட்டளையால் ஓர் அசுரன் கண்ணன் கன்றுகள் மேய்க்கும் இடத்தில் விளாமரமாக நின்றான். நிழலில் கண்ணன் ஒதுங்கும்போது மேலே

சாய்ந்து கொல்லத் திட்டம் இட்டிருந்தான்.

வத்சாசுரன் என்பவன் கன்று வடிவில் வந்தான். கண்ணனை முட்டிக் கொல்லக் கருதினான்.

எம்பெருமான் இந்த இருவருடைய மாயச் செயலை உணர்ந்தார். ஒரு கல்லில் இரு மாங்காய்களை வீழ்த்துமாப்போல் இருவர்களையும் ஒருங்கே ஒழிக்கத் திருவுளம் பற்றினார்.

''அடே! நிரம்ப விளாம் பழங்கள் பழுத்துத் தொங்குகின்றன நாணு! கற்கள் கொண்டு வா. விளாம் பழத்தை அடித்து உண்போம்'' என்றார். ஓர் இடைச் சிறுவன் கல்லெடுக்க முயன்றான்.

கிருஷ்ணர் ''இந்தக் கன்றுக்குட்டியை வீசிக் கனியை உதிர்ப்பேன்'' என்று கூறிக் கன்றுக்குட்டியை எடுத்து மரத்தின்மீது சாடினார்.



கன்றாக இருந்த அரக்கனும் விளாமரமாக இருந்த அரக்கனும் மோதி மாய்ந்து ஒழிந்தார்கள்.



பகாசுரனை அழித்தருளியது

கம்சனால் ஏவப்பட்ட பகாசுரன் யமுனா நதிக் கரையில் வெள்ளி மலைபோல் ஒரு கொக்கு வடிவாக இருந்தான். இராம கிருஷ்ணர்கள் ஆயச் சிறுவர்களுடன் யமுனையில் நீராடிக் கரையேறினார்கள். வஜ்ஜிரம் போன்ற மூக்கினால் மணல்களை வாரி இறைத்து எல்லோருடைய கண்களையும் மறைத்தான் அசுரன். கிருஷ்ணரை விழுங்கினான். கண்ணன் அவன் வயிற்றுக்குள் சென்று ஊழித் தீயைப் போல் வெப்பத்தை உண்டாக்கினார். தீயைப் போல் உள்ள வாயைப் பிளந்து உமிழ்ந்தான் அரக்கன். எம்பெருமான் வெளிப்பட்டுக் கொக்கின் மூக்கைப் பிடித்துப் பிளந்து எறிந்தார்.

பலராமன் முதலியோர் கண்டு மகிழ்ந்தார்கள். இச் செதியை ஆயர் குலச் சிறுவர்கள் கூறக் கேட்ட நந்தகோபாலன் முதலியோர் வருந்தினர். ''தெய்வமே! எங்கள் அருந்தவக் குலமணியைக் காப்பது நின் கடன்'' என்று வேண்டிக் கொண்டார்கள்.

பகவான் பசுக் குலங்களை மேய்ப்பதனால் பசுக் குலங்கள் மிகுதியான பாலைச் சுரந்தன. பாடும் காடும் வீடும் தழைத்தன. **(தொடரும்)**

நவம்பர் 14ந் தேதி: குழந்தைகள் தினம்

1946ம் ஆண்டு நவம்பர் 14ந் தேதி அன்று நேருஜிக்குப் பிறந்த நாள் ஆனதால் காந்திஜியிடம் சென்று ஆசி பெற அவர் தங்கியிருந்த பங்கி காலனிக்குச் சென்றார் நேரு. அங்கிருந்த குழந்தைகள் அவரைச் சுற்றிக்கொண்டு விட்டன. நேருஜியும் அவர்களுடன் விளையாட ஆரம்பித்து விட்டார்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த கவிக் குயில் சரோஜினி தேவி காந்திஜியிடம் ''நம் நேரு பிறந்த தினத்தை ஏன் குழந்தைகள் தினமாகக் கொண்டாடக் கூடாது?'' என்று கேட்டார்.

காந்திஜியும், ''ஆம், இது மிகவும் பொருத்தமான யோசனை'' என்றார்.

அன்றே பங்கி காலனி குழந்தைகள் நேருஜி பிறந்த நாளைக் குழந்தைகள் தினமாகக் கொண்டாடினர்.

குழந்தை உள்ளம் படைத்த நேருஜிக்குக் குழந்தைகளிடம் எத்தனை ஈடுபாடு என்பதற்கு இதோ ஒரு சம்பவம். நமது பாரதம் சுதந்திரம் பெறுவதற்கு முன்பு நடந்தது இது. காந்தித் தாத்தா, வட்டமேஜை மகாநாட்டில் கலந்து கொண்டு தாயகம் திரும்பிய சமயம். அவர் வந்ததும் வராததுமாக அரசாங்கம் அவரைக் கைது செய்தது. அச்சமயம் ஆனந்த பவன் முன்பு ஒரு போலீஸ் 'வான்' வந்து நின்றது. நேருஜி பல குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தார். அவர் கண்களைத் துணியால் கட்டிக் கொண்டு விலகி ஓடும் குழந்தைகளை ஓடிப் பிடித்துக் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்தார். ''இதோ பிடித்து விட்டேன்!'' என்று கூவிக் கண்களை மூடியிருந்த துணியை அகற்றியபோது அவர் பிடித்தது குழந்தையை அல்ல; ஒரு போலீஸ்காரரை!

அன்று அக் குழந்தைகள் திக்பிரமை பிடித்து ஏக்கத்துடன் நின்ற நிலை அவரது மனதை விட்டு அகலவே யில்லை.

பாரதத்தின் பிரதமர் இந்திரா, நேருஜியின் அருமை மகள் என்பது உங்களுக்குத் தெரியும். இந்திரா சிறு குழந்தையாக இருந்தபோதே தாயை இழந்தார். நேருஜிதான் அவருக்குத் தாயாகவும் தந்தையாகவும் இருந்தார். ஆகவே குழந்தைகளிடம் நேருஜிக்கு எப்போதுமே பரிவும் இரக்கமும் உண்டு. குழந்தைகளைக் கூட்டி வைத்துக்கொண்டு ''ஏக்தா ராஜா கா பேட்டா!'' என்று கதை சொல்ல ஆரம்பித்து விடுவது அவரது வழக்கம். ஏன் காந்திஜியே ஒரு முறை அவரிடம், ''என்ன குழந்தை மாதிரி இருக்கிறாயே!'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

உடனே நேருஜி என்ன பதில் சொன்னார் தெரியுமா? ''குழந்தை மாதிரி என்ன? உங்கள் குழந்தைதானே நான்!''

உலகத்தில் குழந்தைகள் உள்ளவரை நேருஜியை யாரும் மறக்க மாட்டார்கள்; மறக்கவும் முடியாது. அவர் உலகக் குழந்தைகளின் சாச்சா (மாமா) வாயிற்றே!

— நஜன்



அருமை மாமா நேருஜி!

'அப்பாவிக் கவிஞன்'



சேர்ந்து சிரித்து மகிழ்ந்திட
  சிறுவர் தினமும் வந்தது!
தேர்ந்து நமது பணியினைச்
  செய்யும் பொறுப்பு தந்தது!


சிறுவர் நமது மீதினில்
  திரளும் அன்பு கொண்டிடும்
அருமை மாமா நேருஜி
  அவத ரித்தார் இந்நாள்!

பாபக் குற்றம் செய்பவர்
  பண்பைக் கண்டு பொங்கிடும்
கோபக் கார நேருஜி
  குழந்தைச் சிரிப்பில் மயங்குவார்!

மாமா நேரு விரும்பிடும்
  மருமக் களென வாழ்ந்திட
நாளும் குற்றம் இன்றியே
  நமது கடமை செய்குவோம்!







கோமாளிப் பறவை

விரிந்து பரந்த ஒரு பெரிய ஏரி. தூரத்திலிருந்து அதைப் பார்க்கிறீர்கள். இளஞ் சிவப்பாக ஓர் ஆவி அந்த ஏரிமீது படிந்திருப்பது போலிருக்கிறது. திடீரென்று அந்த இளஞ் சிவப்பு ஆவி, மேகம்போல உயரக் கிளம்பி ஆகாயத்தில் பறக்கிறது. உங்கள் வியப்பு அதிகமாகிறது. காரணம் நீங்கள் ஆவி, மேகம் என்று நினைத்ததெல்லாம் தவறு. அது ஒரு பறவைக் கூட்டம். ஆமாம், அதன் பெயர் ப்ளாமிங்கோ. நீர்நாரை என்று நாம் கூறுவோம். லத்தீன் மொழியில் ஃப்ளேமா என்றால் ஜ்வாலை — தீக் கொழுந்து — என்று பெயர். இதன் இளஞ் சிவப்பு நிறத்தினால் இதற்கு இப்பெயர். அமைப்பில் கொக்கு போலிருக்கும். ஆனால் மாறுபட்ட அலகு. சின்னஞ் சிறிய கண்கள். நீண்ட கால்கள், கழுத்து. வாத்தின் கால்களைப்போல் விரல்களிடையே தோல் இணைப்பு இருக்கும். இந்தியாவின் சில பகுதிகளில் இந்த ப்ளாமிங்கோக்கள் காணப்படுகின்றன. மிருகக் காட்சிச் சாலைகளில் இந்தப் பறவையைக் காணலாம்.

ப்ளாமிங்கோவின் சிறப்பு அதன் நீண்ட கழுத்துத்தான். இளஞ் சிவப்பு வண்ண இறகு. இது தன் கழுத்தை எப்படி வேண்டுமானாலும் வளைக்கும். ஆங்கில எழுத்து 'S' போலவும் கணித எண் 8 போலவும் சில நேரங்களில் கழுத்தில் தானே ஒரு முடிச்சும் கூடப் போட்டுக் கொள்ளும்! கழுத்தைப் போலவே கால்களும் நீண்டு குச்சியா யிருக்கும். பார்ப்பவர்களுக்கு இது நடக்கும்போது கால் ஒடிந்துவிடுமோ என்று வியப்பாக இருக்கும். ஆனால் இதன் நீண்ட கழுத்தும் கால்களும் இப்பறவைகளுக்கு மிக்க உபயோகமானவை. உலகின் உஷ்ணப் பிரதேசங்களின் நீர் நிலைகளில் நாள் முழுதும் இப்பறவை ஒற்றைக் காலில் தவம் செய்தபடி கழுத்தை உடலில் மடித்துப் பதித்தபடி நிற்கும். ஆழமற்ற நீர்ப் பகுதியானதால் ஆகாரத்தை எதிர் பார்த்துக் காத்திருக்கும். உணவு தேடும்போது கூடக் கழுத்தை வளைத்து நீருக்குள் தலையை விட்டுத் தலையை மேல் கீழாகச் சுழற்றிச் சேற்றைக் குடைந்து துழாவும். இதன் அலகு விசித்திரமான அமைப்புடையது. கீழ்ப் பகுதி பெரியதாக ஒரு பெட்டியைப்போல் இருக்கும். மேல் பாகம் சிறியதாக அந்தப் பெட்டிக்கு மூடி போட்டதுபோல் அதில் பொருந்தும். நீருக்குள் தலைகீழான நிலையில் துழாவும்போது நீர் வாழ் கிளிஞ்சல், நத்தை ஆகியவைகளைக் கிளறி எடுக்க அலகின் மேல் பகுதி கரண்டியைப்போல் செயல்படுகிறது. இவை தங்கள் நீண்ட கால்களை மடக்காமலே உடல் நனையாமலே உணவு தேடிக்கொள்ள வளைந்து நெளியும் நீண்ட கழுத்து சௌகரியமாக இருக்கிறது.

சேற்றைக்கொண்டு குழிவான தட்டுப் போலவோ, பூச்சட்டிகளைப் போலவோ கூடு கட்டும். கூடுகளை அடுத்தடுத்து நெருக்கமாக அமைக்கும், சதுப்பு நிலப்பகுதிகளில். சில பறவைகள் நடுவே தங்கள் கூடுகளை ஆழமற்ற நீரின் நடுவிலே தீவுகளைப் போல் அமைக்கும். வெள்ளை வண்ணத்தில் இரண்டு முட்டைகளை இடும். முட்டையிலிருந்து வெளிப்பட்டதும் ப்ளாமிங்கோக் குஞ்சுகள் உடனே தண்ணீருக்கு வந்து விடுகின்றன, வாத்துக் குஞ்சுகளைப்போல். ஆரம்பத்தில் குஞ்சுகளின் மூக்கு வாத்துக்களுடையதைப் போலத்தான் இருக்கும். வயது ஆக ஆகத்தான் அலகில் இப்படியொரு கோமாளித்தனம் ஏற்படுகிறது.




சடையன் ஒரு மடையன்!


வாண்டுமாமா

சடையன் ஓர் அநாதை. அவனுக்கு அப்பா அம்மா யாரும் கிடையாது. அவனை வளர்த்தது பொன்னி தான். தன் குழந்தைகளைப் போலவே சடையனையும் அன்போடு வளர்த்தாள், பொன்னி. சடையன் வளர்ந்து முதன் முதலில் பேச வாய் திறந்த போது 'மியாவ்' என்ற சப்தம்தான் வந்தது. காரணம் அவனை வளர்த்த பொன்னி ஒரு பூனை. அவனோடு வளர்ந்தவர்கள் பூனைச் சகோதரர்கள். சடையன் மட்டும் என்னவாம்? அவனும் ஒரு நாய்க் குட்டிதானே! நாய்களைக் கண்டால் பூனைகளுக்குப் பிடிக்காது என்று சொல்வார்கள். ஆனால் பொன்னி சடையனைத் தன் மகனைப் போலவே வளர்த்தாள்.

அக்கம் பக்கத்தில் உள்ள நாய்கள் பூனைகளைக் கண்டால் துரத்தும். ஆனால் சடையன் அப்படிச் செய்ய மாட்டான். அவனுக்குத் தானும் ஒரு பூனை என்றே எண்ணம். பூனைக் குடும்பத்திலே வளர்ந்ததனால் அவனுக்குக் குரைக்கவும் வரவில்லை. 'ளொள்'க்குப் பதில் 'மியாவ்'தான் வந்தது அவன் வாயைத் திறந்தால். சடையனின் இந்த நிலையைக் கண்ட மற்ற நாய்கள் அவனைக் கேவலமாக மதித்தன. சிரித்தன. கேலி செய்து விரட்டின. அவர்களில் ரொம்ப மோசமானவன் சங்கிலிதான். சடையன் ஒரு மடையன் என்று அவனுக்கு எண்ணம். அடுத்த பங்களாவில் வளரும் சங்கிலி கொழு கொழுவென் றிருப்பான். நல்ல கம்பீரமான தோற்றம். எதற்கும் அஞ்சாதவன் சங்கிலி. இடி ஒன்றுக்குத்தான் அவன் பயப்படுவான். சங்கிலியைக் கண்டாலே சடையனுக்குக் கிலிதான். அவன் கிண்டலும் கேலியும் வம்பும் அவனை அழ வைக்கும். ஆகவே பலசாலியான சங்கிலியைக் கண்டாலே சடையன் ஓடி ஒளிந்து கொள்வான்.

இப்படியாகச் சடையன் உருவத்தில் நாயாகவும் குணத்திலும் குரலிலும் பூனையாகவும் வளர்ந்து பெரியவனானான். அவனுக்கும் ஒரு எஜமானர் இருந்தார். அவர் ரொம்ப நல்லவர். 'சடையனின் ஏறுமாறான குணத்தைக் கண்டும் கூட அவர் தன் வீட்டுக்குக் காவலாக அவனை வளர்த்து வந்தார். அவர் வீட்டில்தான் பொன்னியின் குட்டிகளான பூனைகளும் வளர்ந்து வந்தன. குரைக்கத் தெரியாத, கடிக்கத் தெரியாதவனாக இருந்தாலும் கூட அவர் தம் வீட்டுக் கேட்டில் '**நாய் ஜாக்கிரதை**' என்ற அறிவிப்புப் பலகையை எழுதி மாட்டியிருந்தார். சடையனால் அவருக்கோ அவர் வீட்டுக்கோ எவ்விதப் பாதுகாப்புமில்லை. வர வரப் பூனைகள் கூடச் சடையனை அலட்சியப்படுத்தின. அவைகளைப் போலக் கத்தினாலும் சடையன் அவைகள் இனமில்லையே. அந்த இளக்காரம்தான் அவைகளுக்கு. பாவம், சடையன்! 'யாருமே நல்ல







வர்கள் இல்லை இந்த உலகத்தில்' என்று ஏக்கம் பிடித்துப் போனான். அவனுக்கு உணவு செல்ல வில்லை. உற்சாகமில்லை. ஏஜமானரைக் கண்டால் வாலாட்டக் கூடத் தெரியவில்லை. உறக்கமும் கிடையாது. தூங்கினால் சங்கிலி துரத்துவது போலக் கனவு கண்டு விழித்துக்கொள்ளுவான். வர வரத் தம் நாய் இளைத்து வருவதைக் கண்ட எஜமானர் அவனை ஒரு மிருக வைத்தியரிடம் கூட்டிப் போனார். அவர் சடையனை நன்கு சோதித்துவிட்டு ''உடம்பில் ரத்தமில்லை'' என்று தெம்பூட்டும் நல்ல மருந்துகளாக எழுதிக் கொடுத்தார். சடையனுக்கு மருந்து பிடிக்க வில்லை. மாத்திரைகளைச் சாப்பிடவில்லை.


பார்த்தார் எஜமானர். ''இவனுக்கு உடல் நோய் இல்லை. மன நோய்தான். ஆகவே...'' என்று ஒரு மனோதத்துவ வைத்தியரிடம் அழைத்துப் போனார். அவர் ரொம்ப சாமர்த்தியசாலி. சடையனின் இந்த நிலைக்குக் காரணத்தைக் கண்டு பிடித்து விட்டார். மெள்ள மெள்ள அவனுக்குத் தன்னம்பிக்கையும் தைரியமும் ஏற்படும் பயிற்சிகளை அளித்தார். தாழ்வு மனப் பான்மையை விரட்டி, தன்னைப் பற்றி உயர்வாக—தான் ஒரு தைரியமான, பயமறியாத கம்பீரமான நாய் என்று நினைக்கும்படி செய்தார்.


சடையனுக்குப் புதிய தெம்பு ஏற்பட்டது. நல்ல பசி உண்டாயிற்று. கருகருப்பாகப் பங்களாவில் ஓடியாடினான். எஜமானரைக் கண்டால் அவன் வால் தானாக ஆடிற்று. நாய் போலவே தூங்கினான். நாயாகவே வாழலானான்!

ஒரு நாள்....

சடையன் தன் வீட்டு வாசலில் நெஞ்சை நிமிர்த்தியபடி உட்கார்ந்திருந்தான். அப்போது தான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. அடுத்த வீட்டி லிருந்து சங்கிலி இவனைப் பார்த்தான். வழக்கப்








படி அவனைப் பயமுறுத்தி ஓட ஓட விரட்டி வேடிக்கை பார்க்க நினைத்த சங்கிலி உறுமியபடி ஓடி வந்தான்.. அவன் பற்கள் சூரிய ஒளியில் பளிச்சிட்டன. முதலில் சடையனுக்கு நடுக்கமாக இருந்தது. ஆனால் மனோதத்துவ டாக்டர் கூறிய அறிவுரை நினைவுக்கு வரவே தைரியமாக உட்கார்ந்திருந்தான், அசையாமல். சங்கிலிக்கு இது புதுமையாக இருந்தது. உறுமினான். 'கர் குர்' என்று கர்ஜித்தான். கடித்துக் குதறுவது போலப் பற்களைக் காட்டினான். ஆனால் சடையன் எதற்கும் அசைந்து கொடுக்காமல் அலட்சியமாகக் கண்களை மூடியபடி உட்கார்ந்திருந்தான். அதே சமயம் திடீரென்று வானத்தில் கோடை மேகங்கள் கூடின. இதைச் சங்கிலியோ சடையனோ கவனிக்கவேயில்லை.

சங்கிலியின் ஆர்ப்பாட்டமெல்லாம் ஆனதும் சடையன் மூடிக் கொண்டிருந்த தன் கண்களைத் திறந்தான். இனி அவனுடைய முறை. சங்கிலிக்குப் பதில் சொல்லியாக வேண்டும். மூச்சை நன்கு இழுத்துக் கொண்டான். ''**ளொள்....ள்..... கர்.....ர் ளொள்**'' என்று குரல் கொடுத்தானே பார்க்கலாம்! நிஜமான நாயின் கம்பீரமான குரலில் குரைத்தான் சடையன்! அதே சமயம் கிடுகிடு படபட தடதட வென்று ஆகாயத்தில் இடியும் அதிர்ந்தது. அவ்வளவுதான். சங்கிலிக்கு இடி என்றால் தான் குலை நடுக்கமாயிற்றே. சடையனின் குரைப்பும் இடியின் அதிர்வும் சேரவே இடி போன்ற குரலில் அவன் தான் குரைக்கிறான் என்று நடுநடுங்கிப் போய் வாலைச் சுருட்டிக் கால்களுக்கு இடையே நுழைத்துக் கொண்டு எடுத்தான் ஓட்டம் சங்கிலி! 'அடேயப்பா! சடையனுக்கு இவ்வளவு கோபமும், இடி போன்ற இத்தனை கம்பீரமான குரலும் என்றைக்கு வந்தன?' என்று அவன் இடிக் குரலை நினைத்து இருட்டு மூலையில் போய் ஒண்டிக் கொண்டான் சங்கிலி. 'அப்பாடா! கடைசியில் நாம் ஒரு நிஜமான நாய் ஆகிவிட்டோம்' என்ற மகிழ்ச்சியும் பெருமையும் சடையனுக்கு வந்தது. பூனைகளும் அவனிடம் இப்போது அன்பும் மரியாதையும் காட்டலாயின. தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்ட நேரத்தில் கொஞ்சம் அதிர்ஷ்டமும் சேர்ந்து கொள்ளவே சடையனுக்குப் புது வாழ்வே வந்தது. இப்போது எஜமான் தம் வீட்டு கேட்டிலிருந்த 'நாய் ஜாக்கிரதை' போர்டில் சடையனின் கம்பீரமான போட்டோவையும் சேர்த்திருக்கிறாராம்!



தெரிந்து கொள்ளுங்கள்!

முத்துக் குளிக்க வாரீகளா?

நல் முத்து — மிக உயர்ந்த பொருள். இந்த நல்முத்து எப்படிக் கிடைக்கிறது? கடலில் வாழும் ஒரு வகைப் பூச்சி இம் முத்துக்களை உண்டாக்குகிறது. இதற்கு முத்துச் சிப்பி என்று பெயர்.

செயற்கை முத்துக்களை மனிதன் இன்று கடலில் விளைவிக்கிறான். வியப்பாக இருக்கிறதா? ஆனால் உண்மை. இந்த அதிசயம் ஜப்பானில் நடைபெறுகிறது. மாடுகளை வளர்த்துப் பால் கறப்பது போல் முத்துச் சிப்பிகளை வளர்த்து அதன் உடலிலிருந்து முத்துக்களை விளைவிக்கிறார்கள்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்னால் கோகிசி மிகிமோடா என்ற ஊர் சுற்றும் ஏழைக் கூடைக்காரன் — வியாபாரி — தென் ஜப்பானில் இருந்தான். இவன் கண்டுபிடித்ததுதான் இந்தக் கலை. இயற்கை முத்திலிருந்து இந்தச் செயற்கை முத்துக்கள் மதிப்பில்தான் குறைவே தவிரப் பார்வைக்கு எவ்வித வித்தியாசமும் தெரியாது. எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தால்தான் இயற்கையா, செயற்கையா என்ற உண்மை புலப்படும்.


செயற்கை முத்துக்களை எப்படித் தயாரிக்கிறார்கள்? ஜப்பானியப் பெண்கள் முத்துச் சிப்பிகள் உள்ள கடல் பகுதியில் முத்துக் குளித்துச் சிப்பிகளைச் சேகரிக்கிறார்கள். மூன்று வயது உள்ளதும், வியாதிகளில்லாத ஆரோக்கியமானதுமான சிப்பிகளையே தேர்ந்தெடுக்கிறார்கள். இதற்கு அனுபவம் தேவை. முத்துக் குளித்தல் — (சிப்பிக்காகக் குளித்தல்!) கடினமான வேலை. சிப்பிகளைச் சேகரிப்பதில் பெண்களே வல்லவர்கள்.

சிப்பிகள் கரைக்குக் கொண்டுவரப் பட்டதும் அவைகளைப் பட்டினி போடுகிறார்கள். அதாவது உப்பு நீரிலிருந்தால்தான் அவற்றுக்குப் பலம். ஆகவே, இவைகளைச் சுத்த நீரில் சில மணி நேரம் போட்டு வைப்பார்கள். பிறகு மரக் கத்தி கொண்டு சிப்பிகளின் வாயை அகற்றி அதனுள் முத்துக் கருவைத் திணித்து மூடிவிடுவார்கள். இந்த முத்துக் கரு என்பது என்ன? கிளிஞ்சலால் உருவான ஒரு குன்றிமணி. அந்நியப் பொருள் தன் உடலுக்குள் வந்ததும் அவஸ்தை தாங்காத சிப்பி அதை அழிக்கத் தன் உடலிலிருந்து ஒருவகை திரவத்தை உற்பத்தி செய்து அதைச் சுற்றிப் படர விடுகிறது. முத்தும் உற்பத்தியாக ஆரம்பிக்கிறது. கிளிஞ்சல் துண்டு பெரிதானால் விலை மலிவான செயற்கை முத்துத்தான் உற்பத்தியாகும்.

இவ்வித சிப்பிக்குள் முத்துக் கரு செலுத்தப்பட்டதும் இவைகளை மறுபடியும் கடலில் போட்டு விடுகிறார்கள். ஐந்திலிருந்து ஏழு வருஷங்கள் ஆகின்றன, இந்தச் சிப்பிகளுக்குள் முத்து வளர. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இந்தச் சிப்பிகளை எடுத்து இதன் மேல் ஒட்டைச் சுரண்டிச் சுத்தம் செய்கிறார்கள், ஒட்டுண்ணிகளால் சிப்பியின் ஆரோக்கியம் கெடாதிருக்க. கடலில் போட்டபின் செயற்கை முத்து வளர்க்கும் சிப்பி எது என்று எப்படித் தெரியும் என்கிறீர்களா? சும்மாவா போடுவார்கள்? இந்தச் சிப்பிகளை அதற்கெனத் தயாரித்துள்ள வலைக் கூண்டுகளில் வைத்துத்தான் கடலில் போடுவார்கள். சிப்பிகளின்மீது கிளிஞ்சல் கரு செலுத்திய தேதியும் குறிக்கப்பட்டிருக்கும். இப்படிக் காப்பாற்றி வளர்த்து ஏழு வருடங்கள் கழித்துச் சிப்பியிலிருந்து முத்து வெளியே எடுக்கப்படுகிறது. அவை உருவத்துக்கும் நிறத்துக்கும் ஏற்பத் தரம் பிரிக்கப்படுகின்றன. நிறமா என்கிறீர்களா? நல்முத்துக்கள்தான் வெண்மையானவை. இவர்களாக விளைவிக்கும் இம்முத்துக்கள் இளஞ்சிவப்பு, தங்க நிறம், ஏன், கறுப்பு முத்துக்களும் கூட வளர்க்கப்படுகின்றன. தரம் பிரித்தானதும் அனுபவமும் திறமையும் உடைய ஒருவர் இம்முத்துக்களில் எந்தப் பகுதியில் துவாரமிடலாம் என்பதைக் குறிப்பிட்டு நிர்ணயிக்கிறார்.

முத்துக்களைக் கோப்பதற்கு ஏற்ப அதில் துவாரமிடுவதை ஒரு நுண்ணிய யந்திரம் செய்கிறது. முத்தின் இருபுறமிருந்தும் ஒரே சமயத்தில் இவ்வியந்திரம் துவாரமிட்டுக் கொண்டு வரும். ஒரு பக்கமிருந்து மறு பக்கத்துக்கு ஒரே நேராகத் துளைத்தால் முத்தில் விரிசல் ஏற்படும். இதைத் தடுக்கவே இம்முறை. இதன் பிறகு... பிறகென்ன? முத்து மாலையாகக் கழுத்தில் புரண்டு கொண்டிருக்கும்.

—விகேயெம்



மூளைக்கு வேலை



ராயர் சபையில் ராமன்!


காராம்பசுவின் பால்

தெனாலிராமனைப் பற்றி நிறையக் கதைகள் கேள்விப் பட்டிருப்பீர்களே? கிருஷ்ண தேவராயரின் ஆஸ்தானத்தை அலங்கரித்த அறிவாளிகளுள் தெனாலி ராமனும் ஒருவன். அவன் செயல்கள் ஹாஸ்யம் அளிப்பவைகளாக இருந்தாலும் அதில் சமயோசித அறிவுத் திறனைக் காணலாம். ஒரு சமயம் கிருஷ்ணதேவ ராயர் அவையில் ஒரு பால்காரர் காராம்பசுவின் பாலைக் கொண்டு வந்து மன்னருக்குக் காணிக்கையாகக் கொடுத்தார். ஒரு தவலையில் பால் கொஞ்சமிருந்தது. அது தவிர ஒரு ஐந்து ஆழாக்குக் குவளையும் மூன்று ஆழாக்குக் குவளையும் அது நிறையப் பாலுடன் இருந்தன. அவைகளையே பார்த்துக் கொண்டிருந்த ராயருக்குத் தெனாலி ராமனைச் சீண்டிப் பார்க்க வேண்டும் என்று ஆசை ஏற்பட்டது. ''ராமா! இதோ இங்குள்ள குவளைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு ஆழாக்குப் பால் மட்டுமே இருக்கும்படி செய்ய வேண்டும். அளந்து ஊற்றி மாற்ற வேறு பாத்திரம் ஏதும் கிடையாது. எதை எதில் கொட்டி எப்படி மாற்றுவாயோ எனக்குத் தெரியாது. ஒவ்வொரு குவளையிலும் கணக்காக ஒரே ஒரு ஆழாக்குப் பால் மட்டுமே இருக்கும்படி செய், பார்க்கலாம்'' என்றார். ராமன் பால் நிறைந்த ஐந்தாழாக்குக் குவளை, மூன்றாழாக்குக் குவளை கொஞ்சமாகப் பாலுள்ள தவலை மூன்றையும் பார்த்தான். உடனே ''இதென்னபிரமாதம்!'' என்று மடமடவென்று ஏதேதோ செய்தான். முடிவில் ஒவ்வொரு குவளையிலும் அவர் கேட்டபடி ஓர் ஆழாக்குப்பால் மட்டுமே இருந்தது. ராமன் இதை எப்படிச் செய்தான்? (விடை: 24ம் பக்கம்)

தெனாலிராமன் தையற்காரனானன்

இன்னொரு நாள் ராயரின் சபைக்கு ஒரு சேணியன் வந்திருந்தான். ஜரிகை வேலைப்பாடு செய்த கட்டம் போட்ட பட்டுத் துணி ஒன்றை விரித்து ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினான் அவன்.

மன்னரும் அதை ஏற்றுக் கொண்டு அவனுக்குப் பரிசளித்து அனுப்பினார்.



ராயர், ராமனிடம் கொடுத்த துண்டுத் துணி இதுதான்.

பிறகு அந்தத் துணியிலிருந்து ஒரு பகுதியை வெட்டித் தம்மிடம் வைத்துக் கொண்டார். மீதமுள்ள துண்டைத் தெனாலிராமனிடம் காட்டி ''ராமா! இந்தத் துணியை எப்படி வெட்டுவாயோ, எங்கு கத்தரிப்பாயோ தெரியாது. இதை மறுபடியும் ஒரு சச்சதுரமான விரிப்பாக்கித் தர வேண்டும். சதுரங்களை உண்டாக்கும் கோடுகள் மீதாகத்தான் நீ வெட்டலாம். ஆனால் துண்டுகளைச் சேர்த்த பின் துணியின் கோலம் மாறக் கூடாது. முடியுமா உன்னால்?'' என்று கேட்டார்.

தெனாலி ராமனால் முடியாததும் உண்டோ? வெட்டி ஒன்று சேர்த்துக் காட்டினான். சிறிது நேரத்தில். ராயர் ராமனிடம் கொடுத்த துண்டுத் துணி கீழே தரப்பட்டுள்ளது. ராமன் சேர்த்து உருவாக்கியது...? நீங்கள் முயன்று பாருங்கள். முடியாவிட்டால் விடை 20ம் பக்கத்தில் உள்ளது.

சுண்டு, குண்டு சீமாத் தாத்தா...

சாமா

“தாத்தா! பள்ளிக்கூடத்தில் டிரில் கிளாஸுக்கு ஷூஸ்தான் போட்டுக் கொண்டு வரணுமாம். இல்லாவிட்டால் டிரில் மாஸ்டர் வெளியே அனுப்பி விடுவாராம். அதனாலே எங்கள் இரண்டு பேருக்கும் 'பூட்ஸ்' வாங்கித் தாங்கோ'' என்று சுண்டுவும் குண்டுவும் தாத்தாவிடம் அடம் பிடிக்க ஆரம்பித்தார்கள். இருவரையும் பூட்ஸ் கடைக்கு அழைத்துப் போனார் சீமாத் தாத்தா.

காலணிக் கடையில் சுண்டுவும், குண்டுவும் பலவிதமான 'பூட்ஸ்'களைப் போட்டும் கழற்றியும், 'இது பிடிக்கவில்லை', 'அதைக் கொண்டா' என்று அந்தக் கடைச் சிப்பந்தியின் பிராணனை வாங்கி விட்டார்கள். கடைசியாக இரண்டு பேருக்கும் பிடித்தமாக பார்வையில் தூரத்தில் ரோடு போடும் வேலை தென்பட்டது.

''டேய்! ரோட்டுக்குத் தார் போடறாங்கடா வா, வேடிக்கை பார்க்கலாம்'' என்று சுண்டுவை இழுத்துக் கொண்டு ஓட இருவரும் அதன் அருகில் போய் நின்று வேடிக்கை பார்த்தனர். அந்த சுவாரசியத்தில் நகர்ந்து நகர்ந்து தார் கொட்டிய இடத்தின் மேலே வெகு நேரம் நின்றதின் பலன், கால்களையே தூக்க முடியாமல் இருவருடைய பூட்ஸ் கால்களும் தாரில் அமிழ்ந்து பிடித்துக் கொண்டு விட்டன. ஆனமட்டும் கால்களை நகர்த்திப் பார்த்தார்கள். முடியவில்லை. பையன்கள் கூச்சல் போடுகிற அளவுக்கு ஆகி விட்டது நிலைமை!

இதன் நடுவில் தாத்தா கடை வாசலில் வந்து எட்டிப் பார்த்தார், ஓடிய பேரப் பிள்ளைகள் வருகிறார்களா என்று. கடைக்காரரின் கூச்சலை அவரால் தாங்க முடியவில்லை. ''அவங்க வந்தால் வரட்டும், வராவிட்டால் போகட்டும். பூட்ஸ்களுக்கான பணத்தை வைங்க சார்!'' என்றார் கடைக்காரர். இந்த இக்கட்டான சமயத்தில் தாத்தாவின் பார்வை வெகுதூரத்தில் உள்ள சுண்டு குண்டுவின் பேரிலும் விழுந்தது. அந்தக் காட்சியினால் அவருக்கு மயக்கமே வரும்போலாகி விட்டது.




இரண்டு ஜோடி பூட்ஸ்களை அணிந்து கொண்டு 'நடந்து பார்க்கலாமா?' என்றார்கள். கடைச் சிப்பந்தியும் அனுமதி வழங்கினார். சுண்டுவும் குண்டுவும் பலவிதமாகக் கடைக்குள்ளேயே அங்கு மிங்கும் நடை பழகினார்கள். 'ஓடிப் பார்க்கலாமா?' என்றார்கள். ''வெளியில் ஓட அனுமதிக்க முடியாது. அழுக்கானால் திருப்பி எடுக்க மாட்டோம்'' என்று கூறிய கடையாள் வேறு வேலையில் ஈடுபடலானார். தாத்தாவும் அவர்களை வெளியில் ஓட அனுமதிக்கவில்லை. ஆனால் சுண்டுவும் குண்டுவும் 'எங்கள் காலுக்குச் சரியாயில்லாமல் எப்படி வாங்க முடியும்?' என்று கூறியபடி கடையைவிட்டு இறங்கி ஓடிவிட்டார்கள். தெரு முனை வரையிலும் அவர்கள் ஓடினார்கள்.

''பூட்ஸ் பிடிச்சிருக்குடா. கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொண்டு கடைக்குத் திரும்பலாம்''. என்ற குண்டுவின்


தார்க் கட்டியின் நடுவே சுண்டு குண்டுவின் பூட்ஸ்கள் அமுங்கிக் கிடந்தன. பூட்ஸைக் கழற்றச் சுண்டு குண்டுவுக்கும் மனமில்லை. பூட்ஸை விடுவதற்குத் தாரும் தயாராயில்லை. தாத்தா பேசாமல் கடைக்காரரிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு வேகமாகத் திரும்பினார். எதிர்பாராமல் அங்கு டிரில் மாஸ்டரும் வந்து சேர்ந்தார்.

சீமாத் தாத்தா டிரில் மாஸ்டரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்: ''பூட்ஸ் இல்லாமல் கிளாஸுக்கு வரக் கூடாதுன்னு சொன்னீங்களாம். இப்ப பார்த்தீங்களா? புது பூட்சுகள் இருந்தும் அவர்களால் உங்க கிளாஸுக்கு வர முடியாது!''



வீராதி வீரன்
கதை: கௌசிகன்
சித்திரம்: ரமணி..
ரஹீமின் தீரச் செயல் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருந்தது. முக்தி வாஹினிகளுக்கு அவனைத் தெரியாவிட்டாலும் யாரோ ஒரு சிறுவன் அபாரமான சாகஸங்களைச் செய்கிறான் என்ற வரை செய்தி பரவி இருந்தது. இப்போதெல்லாம் ரஹீம் நகருக்குள் இருப்பதில்லை. இருக்க முடிவதில்லை. கடற்கரை, காடுகள் இவையே அவனது இருப்பிடம். ஒரு நாள் பாழடைந்த ஒரு கலங்கரை விளக்கத்தின் மீதேறிப் பார்த்துக் கொண்டிருந்த போது.......
அதோ பார் நவீன். அந்தச் சிறிய நீர்மூழ்கி பாகிஸ்தானுடையது. அதை உலவ விட்டால் முக்தி வாஹினிகளுக்குத் தொல்லை.
15
இதுதான் கடற்கரைத் தளம். எரிபொருளும் மற்ற சாதனங்களும் நிரப்பிக் கொள்ள அந்த நீர்மூழ்கியை இங்கு தான் கொண்டு வருவார்கள்.
அதோ, செண்ட்ரி. இருட்டுவது நமக்குச் சௌகரியம். அந்த விளக்குகளை அணைத்து விட்டால்...ம்.. ஒரு ஐடியா நவீன். ஜம்பு இப்படி வா...
ரஹீமின் உத்தரவுப்படி கையில் ஒரு கழியுடன் ஜம்பு ஒயர் மீது, கயிற்றில் நடப்பவனைப் போலப் பாலன்ஸ் பழகியது...
படார்.. ஒரு விளக்கு! மடார்! அடுத்தது. அடுத்தது! ஜம்புவுக்கு விளக்குகளை அடித்து உடைப்பது ஒரு விளையாட்டாக இருந்தது.


அதே சமயம் அம்பு ஏற்படுத்திய இருட்டில் ரஹீமும் நவீனும் முள் வேலியில் வழி உண்டாக்கிக் கொண்டு ஜிம்மியுடன் உள்ளே நுழைந்தார்கள்...
தேவையான விளக்குகளை உடைத்
பின் அம்பு கம்பத்தின் வழியே இற
வதை ஒரு காவல்காரன் பார்த்து
விட்டான்...
அவன் எச்சரிக்கை அறிவிப்பு எழுப்பினால் எல்லாம் குழப்பமாகிவிடும் என்பதை — உணர்ந்த ரஹீம் ஜிம்மியை அவன் மீது ஏவினான். காவல்காரன் குரல் கொடுக்கு முன் ஜிம்மி அவன் மீது பாய்ந்த வேகத்தில், நிலை தடுமாறிய அவன் தலை கற்சுவரில் மோதவே நினைவிழந்து விழுந்தான்...
ரஹீம் நவீனின் கைகள் வேகமாக இயங்கின. காவல்காரனைக் கட்டி உருட்டினார்கள் ஓரமாக.
துறைமுகத்தில் தீயணைப்புக்குப் பயன் படுத்தும் நீர்க்குழாய் இது. சீக்கிரம் இதை அந்த நீர்மூழ்கிக்குள் நுழை. ஓசையின்றிச் செயல் படு.
கவலைப் படாதே. உள்ளே யாருமில்லை. எல்லாரும் குடித்துக் களிக்கப் போயிருக்கிறார்கள். நீர்க் குழாயைத் திறந்து விடுகிறேன். விரைவில் நீர்மூழ்கிக்குள் தண்ணீர் நிரம்பும்.


ால் மணியில் — வெகு வேகமாக நீர்மூழ்கிக்குள்
ண்ணீர் நிரம்பியது. மெள்ள மெள்ள அது மூழ்
லாயிற்று. அப்போது ஏற்பட்ட பெரு ஓசை
ாரத்திலிருந்த காவல்காரர்களை வர வழைத்து
விட்டது.
நவீன்.. ஓடு. ஓடு!
எனக்காகக் காத்திருக்
காதே. எப்படியும்
வேண்டும். பிடிபட்டு
விடக் கூடாது.
பாதிஸ்கான் காவலாளியின் துப்பாக்
கிக்குப் பதில் அலறியபடி ஓடிக்
கொண்டிருந்த ரஹீம், கட்டிப் போட்ட
காவல்காரன் அந்த திடப்பதைக்
கவனிக்கவில்லை. அவன் கால் தடுக்
கிக் கீழே விழுந்தான்.
கைத்துப்பாக்கி
நழுவி ஓடியது.
ஐயோ! மோசம் போச்சுதே.
காவல்காரர்கள் ஓடி வரு
கிறார்களே. என் துப்பாக்கி?
அதோ அங்கே. எப்படியும்
அதை எம்பி எடுத்துக்
கொண்டு விட வேண்டும்.
ஆனால் அதற்குள் ஓடி வரும் இரு
காவல்காரர்களையும் ஒரு துப்பாக்கி
முனை தடுத்து நிறுத்தியது. காவல்
காரர்கள் திகைத்துப் போனார்கள்.
ஒரு அடி
நகர்ந்தாலும்
தீர்ந்தீர்கள்.
உஷார்!
யார்..?
தொடரும்..



தேச தேசக் கதைகள் :
ரஷ்யா

தங்க மீன்

“ஸ்பா”

வெகு காலத்துக்குமுன் ரஷ்ய நாட்டில், டர்மினிஸ்டான் என்ற ஊரை, கான் என்ற அரசன் ஆண்டு வந்தான். அந்த ஊரின் கடலோரத்தில் உள்ள குடிசையில் ஓர் ஏழைச் செம்படவனும், அவனுடைய ஒரே மகன் டயீரும் வாழ்ந்து வந்தனர். செம்படவனுக்குச் சொந்தமானவை ஓர் ஓட்டைப் படகும், கிழிந்த வலையும்தான்.

ஒரு நாள் செம்படவனும், டயீரும் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, அவர்கள் வலையில் ஒரு தங்க மீன் சிக்கியது. அதைப் பார்த்ததும் செம்படவன் தன் மகனிடம், ''இந்தத் தங்க மீனை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். நான் போய் நம் அரசனை அழைத்து வருகிறேன். இது அவருக்குச் சொந்தமாக வேண்டியது'' என்று சொல்லி, அரண்மனைக்குச் சென்றான். செம்படவன் சென்றதும், தங்க மீன் வலையில் சிக்கித் தவிப்பதைப் பார்க்கப் பிடிக்காமல், டயீர் தங்க மீனை வலையிலிருந்து எடுத்துக் கடலிலேயே விட்டு விட்டான். அரசனுடன் திரும்பினான் செம்படவன். வலையில் தங்க மீனைக் காணவில்லை. அரசனுக்குக் கோபம் வந்துவிட்டது. செம்படவன் வேண்டுமென்றே பொய் சொல்லித் தன்னைக் கடற்கரைக்கு வரவழைத்தான் என்று நினைத்து விட்டான். டயீர் தான் செய்ததை அரசனிடம் கூறினான். உடனே அரசனின் கோபம் டயீர்மீது திரும்பியது. அதற்குத் தண்டனையாக அவனைச் செம்படவனுடைய ஓட்டைப் படகிலேயே கை, கால்களைக் கட்டிக் கடலில் மிதக்க விடும்படி கட்டளை யிட்டான். பாவம்! செம்படவன் எவ்வளவு சொல்லியும் அரசன் கேட்கவில்லை. அரசனுடைய கட்டளை நிறைவேற்றப்பட்டது. தன் ஒரே மகன் நிராதரவான நிலையில் கடலில் மிதந்து போவதைப் பார்த்துச் செம்படவன் 'கோ'வென்று கதறினான்.

டயீர் சென்ற படகு மூழ்காமல், காற்றில் அடித்துச் செல்லப்பட்டு வெகு தூரம் சென்று, ஒரு தீவின் அருகில் போய் நின்றது. அங்கு மரங்களின் பின்னாலிருந்து டயீரைப் போலவே ஓர் இளைஞன் வெளியே வந்து, டயீரின் கட்டுக்களை அவிழ்த்து, அவனைக் கரையேற்றினான். டயீருக்கு, அந்தப் புதிய இளைஞனும் தன்னைப் போலவே இருப்பது கண்டு ஒரே அதிசயமாக இருந்தது. புதிய நண்பன் டயீருக்கு உண்ண உணவு கொடுத்தான். இருவரும் நெருங்கிய நண்பர்களாயினர். பிறகு இருவரும் கடலில் மீன் பிடித்தும், தீவில் கிடைப்பதைச் சமமாகப் பங்கிட்டுக் கொண்டும் வாழ்ந்து வந்தார்கள்.


ஒரு நாள் அந்தத் தீவில் இடையன் ஒருவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டு வருவதைப் பார்த்து இரு நண்பர்களுக்கும் ஒரே ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில் தங்கள் இருவரைத் தவிர அந்தத் தீவில் அவர்கள் வேறு யாரையும் பார்த்ததில்லை. இடையனை எங்கிருந்து வருகிறான் என்று விசாரித்தார்கள். அதற்கு இடையன், தீவிலிருந்து மூன்று நாட்கள் பயணம் செய்து போனால் ஒரு பெரிய நகரம் இருப்பதாயும், அதை ஓர் அரசன் ஆண்டு வருவதாயும், தான் அங்கிருந்து வருவதாயும் சொன்னான். ஆனால், அந்த அரசன் மிகவும் துக்கத்தில் இருப்பதாயும், காரணம் அவனுடைய அழகிய மகள், பிறந்ததிலிருந்து ஒரு வார்த்தைகூடப் பேச

வில்லையென்றும், யார் அவளைப் பேச வைக்கிறார்களோ, அவர்கள் எதைக் கேட்டாலும் அரசன் கொடுப்பான் என்றும், அப்படி அவர்கள் செய்யத் தவறினால் அவர்களுடைய தலையை அரசன் வெட்டிவிடுவான் என்றும் சொன்னான். அதைக் கேட்டதும் இரண்டு நண்பர்களும் தங்கள் அதிர்ஷ்டத்தைப் பரிசோதிக்க எண்ணினர்.

டயிரும், அவன் நண்பனும் அரசனுடைய மாளிகையை அடைந்தனர். டயிரின் நண்பன், டயிரிடம் தான் முதலில் உள்ளே போய் அரச குமாரியைப் பேச வைக்க முயலுவதாயும், அப்படிச் செய்து விட்டால் கிடைக்கும் பரிசை இருவரும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளலாம் என்றும் சொன்னான். டயிரும் சம்மதித்தான்.

டயிரின் நண்பன் இளவரசியின் மாளிகையில் நுழைந்ததும், இரண்டு தோழிகள் வெளியே வந்து அவனை எச்சரித்தனர். ''ஐயா! உங்களைப் போல் நிறைய பேர் வந்து, அரசகுமாரியைப் பேச வைக்க முடியாமல், தங்கள் தலைகள் வெட்டப்பட்டு இறந்தனர். ஆகையால் நீங்கள் திரும்பிப் போய் விடுங்கள்'' என்றனர். அவர்களை இலட்சியம் செய்யாமல் அரண்மனைக்குள் சென்ற டயிரின் நண்பன், அரச குமாரியிடம் ஒரு விடுகதை போட்டான். ''ஓ, அரச குமாரியே! நாங்கள் மூன்று சகோதரர்கள். ஒரு நாள் என் மூத்த சகோதரன் மரக் கட்டையில் மிக அழகான ஒரு பறவையைச் செய்தான். இரண்டாம் சகோதரன் காட்டிலிருந்து அழகான பறவைகளின் இறக்கைகளைக் கொண்டு வந்து, அந்த மரப் பறவைக்கு ஒட்ட வைத்தான். நான் ஒரு மாயக் குளத்தைக் கண்டு பிடித்து, அந்த மரப் பறவையை அந்தக் குளத்தில் நனைத்தேன். உடனே அந்தப் பொம்மைப் பறவை நிஜமான உயிருள்ள பறவையாக மாறிவிட்டது. அதிலிருந்து அந்தப் பறவை யாருக்குச் சொந்தம் என்று எங்கள் மூன்று சகோதரர்களிடையே சண்டை உண்டாகிவிட்டது. இதற்கு ஒரு முடிவேயில்லாமல் இருக்கிறது. ஆகையால், உன்னிடம் நியாயம் கோரி வந்திருக்கிறேன்'' என்றான்.

அரசகுமாரி பதிலேதும் சொல்லாமல் தன் வாயை விரலால் காண்பித்து, தலையை அசைத்தாள். அதைப் பார்த்த டயிரின் நண்பனுக்குக் கோபம் வந்துவிட்டது. ''உன்னைப் பேச வைக்க முடியாத காரணத்துக்காக என் தலை வெட்டப்பட்டு, நான் இறக்க வேண்டுமென்றால், உனக்கும் அதே தண்டனையைத் தான் தர வேண்டும்'' என்று பெரியதாகக் கூச்சல் போட்டுக் கொண்டே தன் கத்தியுடன் அரச குமாரியிடம் ஓடினான். அவன் கத்தியுடன் ஓடி வருவதைப் பார்த்த அரசகுமாரி பெரியதாக அலறிக் கொண்டே சிம்மாசனத்திலிருந்து கீழே விழுந்தாள். அவள் கத்தியபோது, அவள் வாயிலிருந்து ஒரு பாம்பு வெளியே வந்து சீறியது. உடனே டயிரின் நண்பன் தன் வாளால் பாம்பை



வெட்டினான். பாம்பு இறந்ததும் அரசகுமாரி பேசினாள்: ''என்னுடைய இந்த மோதிரத்தைக் கொண்டு என் தந்தையிடம் காண்பித்தால் நீ கேட்பதைக் கொடுப்பார்'' என்றாள். இளைஞனும் மோதிரத்துடன் நேரே டயீரிடம் வந்தான். டயீருக்குத் தன் நண்பனை உயிருடன் பார்த்ததில் ஒரே ஆனந்தம்!


டயீரிடம் வந்த நண்பன், தன்னிடம் அரசகுமாரி கொடுத்த மோதிரத்தைக் கொடுத்து, ''நண்பனே! நான் வேறு யாரும் இல்லை. முன்பு நீ காப்பாற்றிய 'தங்கமீன்'தான் நான். முன்பு நீ என்னைக் காப்பாற்றியதற்காக உனக்கு உதவி செய்ய முன்வந்தேன். இந்த மோதிரத்தை அரசனிடம் காட்டி உனக்கு வேண்டியதைப் பெற்றுக் கொள். நான் போய் வருகிறேன். உனக்கு எப்போதாவது என் உதவி தேவையென்றால், கடல் ஓரம் வந்து மூன்று முறை என் பெயரைச் சொல்லிக் கூப்பிடு. நான் வருவேன்'' என்று சொல்லி மறைந்துவிட்டான்.

டயீர் மோதிரத்துடன் அரசனிடம் சென்றான். தன் மகள் பேசிவிட்டது பற்றி மிகச் சந்தோஷம் அடைந்த அரசன், டயீருக்கு எது வேண்டுமானாலும் தருவதாய்ச் சொன்னான். டயீர் அரசகுமாரியையே கல்யாணம் செய்து கொள்வதாகக் கூறியதும், அரசன் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தான்.

சில நாட்களுக்குப் பின் டயீர் எப்போதும் கடலையே பார்த்துக்கொண்டு வருத்தத்தோடு இருப்பதைப் பார்த்த அரசகுமாரி அவனுடைய வருத்தத்துக்கு என்ன காரணம் என்று கேட்டாள். அதற்கு டயீர், ''நான் ஏழை செம்படவன். எனக்குக் கஷ்டப்பட்டு வேலை செய்து பழக்கம். உழைப்பதற்கு இங்கு வாய்ப்பே இல்லை. எனக்குச் சிறையிலிருப்பது போலிருக்கிறது. அது மட்டுமில்லை. என் வயதான அப்பா என்னைக் காணாமல் என்ன வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறாரோ? அவரை நான் பார்க்க வேண்டும். நீயும் என்னுடன் வருவாயா? ஆனால் நீ என்னுடன் வருவதானால் அங்கு நீ ஏழைச் செம்படவனின் மனைவியாகத்தான் வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கும்'' என்றான். அரசகுமாரி டயீருடன் அவன் ஊருக்குச் செல்லச் சம்மதித்தாள்.


''ஆனால் எங்கள் நாட்டில் கப்பல்களே கிடையாதே. உங்கள் தகப்பனாரின் நாட்டுக்குச் செல்லக் கப்பலிலல்லவா பிரயாணம் செய்தாக வேண்டும்? என்ன செய்வது?'' என்று வேதனைப்பட்டாள் இளவரசி. அதற்கு டயீர், ''கவலைப் படாதே. என்னுடன் கடற்கரைக்கு வா'' என்று அவளை அழைத்துச் சென்றான். கடல் ஓரத்தில் நின்று தங்க மீனை மூன்று முறை அழைத்தான். கடலில் பெரிய அலைகள் உண்டாயின. கடலே கொந்தளித்தது. அப்போது அந்த அலைகளின் நடுவே தங்க மீன் வந்தது. டயீர் தன் தந்தையிடம் போக வேண்டும் என்று கேட்டான். அதற்கு மீன், ''இன்று மாலை இருட்டிய பிறகு கடல் ஓரத்தில் ஒரு பெரிய மீன் வரும். அதன் வாயில் நீங்கள் இருவரும் உட்கார்ந்து கொள்ளுங்கள்; உன் தந்தை உள்ள ஊரின் கடற்கரையில் அது உங்களைக் கொண்டுவிடும்'' என்று சொல்லியது.


மாலை வந்ததும் டயீரும் அவன் மனைவியான அரசகுமாரியும் கடற்கரைக்கு வந்தனர். அங்கு ஒரு பெரிய மீன் வந்தது. இருவரும் அதன் திறந்த வாயில் உட்கார்ந்து கொண்டனர். அலைகளால் தாலாட்டப்பட்டு இருவரும் தூங்கி விட்டனர். மறுபடியும் கண் விழித்தபோது மறு நாள் காலை பொழுது விடிந்திருந்தது. மீன் அவர்களைக் கடல் ஓரம் கொண்டு சேர்த்தது. கடல் ஓர ஒரு குடிசை வாயிலில் டயீரின் தந்தை உட்கார்ந்திருந்தான். டயீர் தந்தையிடம் ஓடினான். கிழச் செம்படவனுக்கு மகனைப் பார்த்ததில் ஒரே ஆனந்தம். தன் மனைவியைத் தந்தைக்குக் காண்பித்தான் டயீர். ''நானும், என் மனைவியும் உழைத்துச் சம்பாதித்து உன்னைக் காப்பாற்றுகிறோம்'' என்றான் டயீர். பிறகு மூவரும் அந்தக் குடிசையில் சந்தோஷமாகப் பல காலம் வாழ்ந்திருந்தனர்.



மூளைக்கு வேலை' விடை :

முதல் படத்தில் ராயர் கொடுத்த துணியில் தெனாலி ராமன் எப்படி வெட்டினான் என்பதையும், இரண்டாம் படத்தில் வெட்டிய துண்டுகளை எப்படி ஒன்று சேர்த்துச் சச்சதுரமாக உருவாக்கினான் என்பதையும் காணலாம்.




சிரிக்கச் சிரிக்க..!
சாமா
ஆராய்ச்சியாளர் : இந்தச் செடி அவரைக் குடும்பத்தைச் சேர்ந்தது.
பையன் : அதெப்படி? நாங்க பாடு பட்டு வளர்க்கிறோம். இது எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தது.
ஆசிரியர்
ஆசிரியர் : நீங்க எழுதின துப்பறியும் கதைக்கு ஒரு 'டிடெக்டிவ்' தேவை சார்!
எழுத்தாளர் : எதுக்கு?
ஆசிரியர்: கதையிலுள்ள 'ப்ளாட்டை'க் கண்டு பிடிக்கத்தான்!
"வேலை செய்யப்போற இடத்திலே எதைக் கேட்டாலும் தெரியாதுன்னு சொல்லாதே. தெரியும் நன்னாத் தெரியும்ன்னு சொல்லச் சொன்னேனே. ஏன் திரும்பி வந்தே?"
"நீங்க சொன்னபடியேதான் சொன்னேன். பொய் சொல்லத் தெரியுமான்னு கேட்டாங்க. தெரியும் நன்னாத் தெரியும்னு சொன்னேன்!"
"ஒருநாய் ஆட்டைப் பார்த்தது - இது என்ன காலம்?"
"ஆட்டின் கஷ்ட காலம் சார்!"
"ஏண்டா 'ஹோம் வொர்க்' செய்து கொண்டு வரலே?"
"நான் ஹாஸ்டல்லே இருக்கேன், சார்!"

ஓலைச்சுவடி கூறிய உண்மை



மணிபுரி என்ற நகரில் முத்து என்பவனும் அவன் மனைவி லட்சுமியும் வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் அவன் காட்டுக்குச் சென்று வேட்டையாடி விட்டுத் திரும்புகையில் ஒரு மரத்தில் ஓர் ஓலைச் சுவடி இருந்தது. அதை முத்து படித்தான். அதில் நான்கு பொன் மொழிகள் இருந்தன. அவையாவன:

1. **தனி வழியே செல்லாதே.**
2. **பொது இடத்தில் தங்காதே.**
3. **ஊரார் சொல்லைத் தட்டாதே.**
4. **மனைவியிடம் ரகசியத்தைச் சொல்லாதே.**

முத்து ஓலையுடன் தன் வீட்டை அடைந்தான். தன் மனைவியிடம் ஓலையைப் பற்றி எதுவும் பேசவில்லை ''நான் தேச யாத்திரைக்குப் போகப் போகிறேன். ஆகையால் நீ உன் தந்தை வீட்டில் போய் இரு'' என்றான். லக்ஷ்மியும் முத்துவின் வழிச் செலவுக்குச் சிறிது கட்டுச்சாதமும், கொஞ்சம் பணமும் கொடுத்து வழியனுப்பி வைத்தான். முத்து ஓர் ஊருக்குப் போகும் வழியில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து சாப்பிட்டு விட்டு அருகிலிருந்த ஆற்றில் கையைக் கழுவும்போது ஒரு நண்டு ஊர்ந்து சென்றது. உடனே சுவடியில் இருந்த முதல் வாக்கியம் நினைவுக்கு வந்தது. ஆகையால் அதைப் பிடித்துத் தான் சாப்பிட்ட பாத்திரத்தில் சிறிது தண்ணீரை ஊற்றி அதில் நண்டையும் போட்டுக் கொண்டான்.

நடந்து வந்த களைப்பினால் மரத்தடியில் அப்படியே அயர்ந்து தூங்கிவிட்டான். அவன் படுத்திருந்த மரத்தின் மேல் ஒரு காகமும், ஒரு பாம்பும் வசித்து வந்தன. காகம் யாராவது மனிதர்கள் வந்தால் கரையும். பிறகு அவர்கள் பாத்திரத்தில் ஏதாவது கொண்டு வந்திருந்தால் அதனைச் சாப்பிடும். பாம்போ வழிப்போக்கனைக் காலில் ஒரு போடு போட்டு விட்டுப் போய் விடும். காகத்துக்கு விரோதி எதுவோ, அதுவேதான் பாம்புக்கும் விரோதி. அத்துணை நெருங்கிய நண்பர்கள் இருவரும்.

முத்து தூங்கும்போது வழக்கம்போல் காகம் கரைந்தது. பாம்பு விரைந்தது. முதலில் பாம்பு முத்துவின் காலில் கொத்தி விட்டது. பின்பு காகம் பாத்திரத்தினுள் தலையை விட்டது. உள்ளேயிருந்த நண்டு காக்கையின் தலையைக் கவ்விக் கொண்டது. காகம் தவித்தது; கத்தியது. உடனே நண்டு காகத்தைப் பார்த்து, ''முத்துவைப் பிழைக்க வைத்தால் உன் தலையை விடுவேன்; இல்லாவிட்டால் உன் தலையைத் துண்டித்து விடுவேன்'' என்றது. காகம் வேறு வழியின்றித் தன் தோழன் பாம்பைப் பார்த்து, ''விஷத்தை இழு'' என்றது. மறுநிமிடம் நண்பனின் சொற்படி தன் விஷத்தை மறுபடியும் இழுத்த பாம்பு அதனால் இறந்தது. நண்டும் காகத்தின் தலையை விடவில்லை; நறுக்கி விட்டது. மறுநிமிடம் முத்து தூங்கி எழுந்தவன் போன்று எழுந்தான். பின்பு அவன் நடந்ததை ஊகித்துக் கொண்டான். சுவடியில் உள்ள முதல் பொன்மொழி




''தனிவழியே செல்லாதே'' என்பது. அது உண்மைதான் என்று நினைத்துக் கொண்டு தன் யாத்திரையைத் தொடங்கினான்.

முத்து அமராவதி என்ற நகரத்தை அடைந்தான். அப்போது இருள் கவிழ்ந்த நேரமாதலால் பொது இடமாகிய சத்திரத்தில் தங்கலாம் என்று நினைத்தான். ஆனால் இரண்டாவது பொன்மொழி ஞாபகம் வந்தது. ஆகவின் அடுத்த வீட்டில் அனுமதி கேட்டுக் கொண்டு அவ்வீட்டுத் திண்ணையில் படுத்து உறங்கினான்.

சத்திரத்தில் ஒரு வைர வியாபாரி தங்கி யிருந்தார். இரவு அவர் உறங்கிக் கொண் டிருந்தபோது இரண்டு திருடர்கள் அவரைக் கொலை செய்துவிட்டு அவர் கழுத்திலும், கையிலும், பையிலும் இருந்த வைர நகைகளை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டனர். மறுநாள் காலையில் ஊர்க் காவலர் அச்சத்திரத்தில் தங்கியிருந்த அனைவரையும் கைது செய்தனர். அப்போதுதான் முத்து இரண்டாவது வாக்கியமும் உண்மை தான் எனத் தெரிந்து கொண்டான். ஊர்க் காவலர் இருவர் முத்துவிடம் வந்து வியாபாரியின் சடலத்தைக் கொடுத்து ''இப்பிணத்தை எரித்து விடுங்கள்'' என்றனர். சிறிது நேரம் தயங்கினான் முத்து. பின்பு மூன்றும் பொன்மொழி நினைவுக்கு வரவே சம்மதித்தான். ஊர்க் காவலரும் சிறிது பணத்தை அவனிடம் கொடுத்துப் பிணத்தையும் தூக்கி விட்டனர்.

அவன் அந்தப் பிணத்தைத் தூக்கிக் கொண்டு மயானத்துக்குச் சென்றான். தீ வைக்கு முன்பு வியாபாரியின் உடைகளைக் களைந்தபோது; என்ன ஆச்சரியம்! இடுப்பில் தங்க அரைஞாண் கொடிகளும், தங்கக் காசுகளும், மடியில் சில வைரங்களும் இருந்தன. அவைகளை எடுத்துக்கொண்டு பிணத்துக்கு கடைசிக் காரியங்களை முறைப்படி செய்தான். அந்தப் பாவம் தீரப் பல புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று விட்டுத் திரும்பிக்கொண்டிருந்தபோது ஒரு மரத்தடியில் வந்து தங்கினான். தன் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை நினைத்தான். மூன்றாவது பொன் மொழியாகிய





ஊரார் சொல்லைத் தட்டாததனால்தான் அடைந்த பயனை எண்ணி மகிழ்ச்சி கொண்டான்.

தன் மாமனாரின் வீட்டுக்குத் திரும்பி வந்தான் முத்து. அப்போது நள்ளிரவு. அவ்வேளையில் கதவைத் தட்டித் தூங்குபவர்களுக்குத் தொல்லை தருவானேன் என்று அப்படியே திண்ணையில் படுத்து உறங்கி விட்டான்.

அதிகாலையில் கதவைத் திறந்த போது யாரோ வழிப்போக்கன்தான் படுத்திருக்கிறான் போலும் என்று வீட்டார் எழுப்பினர். முத்து எழுந்ததும் வெளிச்சத்தில் அவனைக் கண்டு மாப்பிள்ளை திரும்பி விட்டதில் மகிழ்ச்சி கொண்டனர். பிறகு சில நாட்களில் தன் மனைவி லட்சுமியுடன் தன் வீட்டுக்குப் போய்ச் சுகமாக வாழ்ந்து வந்தான் முத்து. ஒரு நாள் லக்ஷ்மி முத்துவிடம் ''உங்களுக்கு இவ்வளவு பெரிய தொப்பை எப்படி வந்தது? நீங்கள் திடீரென்று எப்படிப் பெரிய பணக்காரராக மாறினீர்கள்?'' என்று கேட்டாள்.

''நான் யாத்திரைக்குப் போகும் போது ஒரு புதையல் கிடைத்தது. நான் இப்போது கர்ப்பம். நான்கு மாதங்கள் ஆகின்றன. இந்த இரண்டு விஷயங்களையும் யாரிடமும் சொல்லாதே'' என்றான். ஆனால் அவளோ அதை ஊர் முழுதும் தெரியப்படுத்தி விட்டாள்.

இவ்விஷயம் நாட்டின் அரசருக்கு எட்டியது. ஆண் கர்ப்பம் கொண்டால் அரசருக்கு ஆபத்து என்று ஜோதிடர்கள் கூறினார்கள். ஆதலால் அரசர் முத்துவைத் தூக்குப் போடுமாறு உத்தரவிட்டார். காவலர்களும் முத்துவைத் தூக்கு மேடைக்கு அழைத்து வந்தனர். சேனாதிபதி முத்துவிடம் 'உன் கடைசி விருப்பம் என்ன?' என்று கேட்டான். அதற்கு முத்துவும் 'என் கடைசி விருப்பம் அரசரிடம் தனிமையில் சிறிது நேரம் பேச வேண்டும்' என்று கேட்டுக் கொண்டான். அவனுடன் அரசர் பேசுவதற்கு ஒரு தனிமையான இடம் ஒதுக்கிக் கொடுத்தனர்.

முத்து அரசரிடம், ''அரசே! ஆண் எங்காவது கர்ப்பம் தரிப்பதுண்டா? இப்படி ஆலோசியாமல் அவசரப்பட்டு என்னைக் கொல்ல உத்தரவிட்டீர்களே? நான் கர்ப்பமுமில்லை ஒன்றுமில்லை'' என்று தனக்கு ஓலைச் சுவடி கிடைத்ததையும் அதன் பிறகு ஏற்பட்ட அனுபவங்களையும் விளக்கினான். ''அதில் இருந்தபடி முதல் மூன்று பொன்மொழிகளும் உண்மையாயிற்று. கடைசிப் பொன்மொழியாகிய '**மனைவியிடம் ரகசியத்தைச் சொல்லாதே**' என்பது உண்மையா, அல்லது பொய்யா என்பதைச் சோதித்துப் பார்ப்பதற்கே என் மனைவியிடம் இப்படி ஒரு பொய்யைச் சொன்னேன். ஓலைச் சுவடியில் காணப்பட்ட நான்காவது பொன்மொழி உண்மைதான் என்பதை இப்போது தெரிந்து கொண்டேன்'' என்று சொல்லித் தன்னிடம் இருந்த ஓலைச்சுவடியை அரசனிடம் கொடுத்தான் முத்து. உடனே அரசன் முத்துவை விடுதலை செய்து வீட்டுக்கு அனுப்பினார்.

காராம்பசுவின் பால் விடை:

தெனாலிராமன் பால் தவலையிலிருந்த பாலைக் கீழே கொட்டினான். அரசர் திகைத்தார். ஆனால் பொறுத்தார். மூன்றுழாக்குப் பாத்திரத்துப் பாலைக் காலியான தவலையில் கொட்டினான். ஐந்தாழாக்குக் குவளையிலிருந்து மூன்றுழாக்குக் குவளையை நிரப்பிக் கொண்டான். பிறகு அதையும் தவலையில் கொட்டினான். இப்போது தவலையில் ஆறு ஆழாக்குப் பால். மூன்றுழாக்குக் குவளை காலி. ஐந்தாழாக்குக் குவளையில் இப்போதுள்ளது மீதி இரண்டாழாக்குப் பால் இல்லையா? இனி ஐந்தாழாக்குக் குவளையிலுள்ள இரண்டாழாக்குப் பாலை மூன்றுழாக்குக் குவளைக்கு மாற்றினான். இப்போது ஐந்தாழாக்குக் குவளை காலி. தவலையில் உள்ள ஆறு ஆழாக்குக் பாலிலிருந்து ஐந்தாழாக்குப் பாலை நிரப்பிக்கொண்டான். இப்போது தவலையில் ஓர் ஆழாக்கு, மூன்றுழாக்குக் குவளையில் இரண்டாழாக்கு. இனி ஐந்தாழாக்குக் குவளையிலிருந்து மூன்றுழாக்குக் குவளையில் ஓர் ஆழாக்கைக் கொட்டினான். இப்போது ஐந்தாழாக்கில் நாலு ஆழாக்குப் பால் நிரம்பியிருந்தது. மூன்றுழாக்குக் குவளையை சபையிலுள்ள குழந்தைகளிடம் கொடுத்துக் குடிக்கச் செய்தான். அது இப்போது காலி இல்லையா? இப்போது ஐந்து ஆழாக்குக் குவளையிலிருந்து மறுபடியும் மூன்றுழாக்குக் குவளையை நிரப்பினான். இப்போது ஐந்தாழாக்குக் குவளையில் மீதமிருப்பது ஓர் ஆழாக்குத்தானே? மறுபடியும் சபையோருக்கு மூன்றுழாக்குக் குவளையில் இருந்த காராம் பசுவின் பாலை விநியோகம் செய்தான். அது காலியாயிற்று. உடனே தவலையில் விட்டிருந்த ஓர் ஆழாக்குப் பாலை மூன்றுழாக்குக் குவளையில் ஊற்றினான். இப்போது மன்னர் கேட்டபடி ஒவ்வொரு குவளையிலும் ஒவ்வொரு ஆழாக்குப் பால்தான் இருந்தது. மன்னர் கைதட்டினார். நீங்களும்தான் இல்லையா?



செய்து பார்!


பொம்மை செய்வதென்றால் உங்களுக்குப் பிடிக்குமே? இதோ இந்தச் சிங்கப் பொம்மையை நீங்களே செய்யலாம். இதற்கு வேண்டியதெல்லாம் இரண்டு கார்க்குகள், கொஞ்சம் கம்பி (சுலபமாக முறுக்க, வளைக்க ஏற்ற வகையில்) கொஞ்சம் கம்பளி நூல் மஞ்சள் கலரில். கோந்து, நீண்ட குண்டூசி இவைதான். கலரும் பிரஷ்ஷும்தான் உங்களிடம் இருக்குமே. எல்லாம் தயாரா? சிங்கத்தை உருவாக்கலாமா?

1. ஒரு கார்க் பெரிதாகவும், மற்றது சற்றுச் சிறிதாகவும் இருக்கிறதில்லையா? சின்ன கார்க்தான் சிங்கத்தின் தலை. பெரிய கார்க் உடல். குண்டூசியால் மேலேயுள்ள படத்தில் காட்டியுள்ளது போல் பொருத்து.

2. கம்பிகளை முன்னங்கால்கள் பின்னங்கால்களாகப் படத்தில் காட்டியுள்ள படி மடித்து முறுக்கி வளைத்துக்கொள். பின்னங்கால், முன்னங்கால்களின் வித்தியாசத்தைக் கவனி. கால்களின் மேல் பாகம் சிங்கவயிற்றின் அடியில் பொருந்துமாறு சற்றே வளைந்து இருக்கட்டும்.


3. கால்களைச் சிங்கத்தின் உடல் கார்க்கில் தக்கபடி அமைத்து கோந்து அல்லது 'ஸெல்லோ டேப்' கொண்டு பொருத்திவிடு. பின்னங் கால்களை முறையாக வளைத்து அழகுபடுத்து.


4. வாலுக்கு ஒரு கம்பியைக் கார்க்கில் செருகு. வால் குஞ்சத்துக்கும் சிங்கத்தின் பிடரிக்கும் மஞ்சள் கம்பளி நூலைத் தக்கபடி இணைத்துவிடு. இனி உன் பிரஷ் வர்ணம் கொண்டு சிங்கத்தின் வாய், மூக்கு, கண்களைத் தலைக் கார்க்கில் வரைந்து விட்டாயானால் சிங்கம் கர்ஜித்தபடி கம்பீரமாக நிற்பதைக் காணலாம்.



கண்ணாடியில் பார்க்கும்போது அதில் உங்கள் உருவம் எப்படித் தெரியும்? இடம் வலமாகத்தானே தெரியும்? ஆனால் உங்களைப் பிறர் எப்படிப் பார்க்கிறார்களோ, அதே போல் உங்களை நீங்களே பார்த்துக் கொள்ள முடியுமா? முடியும். இதோ இந்த முறைப்படி. இதற்கு வேண்டியதெல்லாம் இரண்டு பாக்கெட் கண்ணாடிகள். சுற்றிலும் அதற்கு பிரேம் இருக்க வேண்டாம். இந்த இரண்டு கண்ணாடிகளையும் முதல் படத்தில் காட்டியுள்ளபடி — நேர் கோணத்தில் — முகத்துக்கு நேரே சற்றுத் தள்ளி — பிடித்துக் கொண்டு, உங்கள் பிரதி பிம்பத்தை அதிலே பாருங்கள். உங்கள் உருவம் சரியான படி தெரியக் கண்ணாடிகளைத் தக்கபடி நகர்த்திக் கொள்ளுங்கள். கண்ணாடியின் கோணம் 90° டிகிரிக்குக் குறைவானால் உங்கள் முகத்தின் பிரதிபிம்பம் ரொம்பவும் அகலமாக இருக்கும். கோணம் 90° டிகிரிக்கு அதிகமாகுமானால் பிரதிபிம்பம் ரொம்ப ஒல்லியாக இருக்கும். •உங்கள் இடது கண்ணைச் சிமிட்டுங்கள். நீங்கள் சிமிட்டும் கண் அசையாது. வேறு கண்தான் சிமிட்டும்!

இந்த மாற்றம் எதனால்? உங்கள் முகத்தின் ஒவ்வொரு பக்கமும் இரு தடவைகள் இரட்டைக் கண்ணாடிகளில் பிரதிபலிக்கப்படுகின்றன. ஒரு கண்ணாடி மாற்றியதை மற்றொரு கண்ணாடி திருப்பி மறுபடியும் மாற்றிவிடுகிறது.. படம் 2ல் அதைப் பாருங்கள். ஆகவே மாறுபடாத பிரதிபிம்பம் ஏற்படுகிறது. செய்து பாருங்கள்.





உலகின் பழங்குடி மக்கள் :

ஸுலூக்கள்



பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் ஐரோப்பியர்கள் ஆப்பிரிக்கக் கண்டத்துக்குள் புகுந்து 'காலனி' ஆதிக்கத்தை ஏற்படுத்த முயன்றபோது அது அவ்வளவு எளிதான காரியமாக இல்லை. ஆப்பிரிக்காவின் பழங்குடிகளில் பல பிரிவினரும் வெள்ளையர்களை எதிர்த்தார்கள். இவர்களில் முக்கியமானவர்கள் ஸுலூ இனத்தவர். தென் ஆப்பிரிக்காவின் வீரம் மிக்க வகுப்பினர் இந்த ஸுலூ பழங்குடியினர். ஸுலூ இனத்துப் போர்வீரர்கள் போர்ப் பயிற்சி மிக்கவர்கள். கட்டுப்பாடாகப் போரிடக் கூடியவர்கள். இவர்களின் செல்வம் கால்நடைகள்தான்.

ஸுலூ இனத்தவர் தங்களை ஆளும் தலைவனைச் சர்வ வல்லமை பெற்றவனாகக் கருதுகிறார்கள். அரசனுக்கு உரிய மரியாதை இவனுக்கு. தலைவன் பெரும் செல்வந்தனாக இருப்பான். இவனுக்குப் பல மனைவிகள் இருப்பர். செல்வமான கால்நடைகளை உணவுக்காகக் கொல்லமாட்டார்கள். எப்போதாவது அபூர்வமாகத்தான் இவைகளைக் கொல்லுவார்கள். இனத்தின் தலைவன் இட்டதே சட்டம். எல்லாவிதமான வழக்குகளும் தலைவனின் முன்னிலையில் விசாரித்துத் தீர்ப்பு வழங்கப்படும். தலைவனுக்கு ஆலோசனை கூறுவான் கிராமத்துப் பூசாரி.




இருப்பிடம் :

ஸுலூக்கள் கிராமங்களில் நிரந்தரமாக வசிப்பதில்லை. தங்கள் சுற்றத்தாரோடு கூட்டம் கூட்டமாகக் குடிசைகள் அமைத்துக் கொண்டு வாழுகிறார்கள். இவர்களுடைய குடியிருப்புக்களுக்கு 'க்ரால்' (Kraal) என்று பெயர். இது டச்சு மொழியிலிருந்து வந்தது. தேன்கூடுகளின் அமைப்பில் பல குடிசைகளை வட்டமாக நிறுவிக் கொள்கிறார்கள். இதற்குள்ளேயே கால்நடைகளுக்கும் கொட்டில் இருக்கும். முக்கியமான பெரிய க்ரால் தலைவனுடையது. படை வீரர்களின் பாசறை போலிருக்கும் இது.

அடிக்கடி இடம் பெயர்ந்து செல்லக் கூடியவர்களாகையால் ஸுலூக்களின் குடியிருப்புக்களான குடிசைகள் எளிய முறையில் அமைக்கப்படுகின்றன. குடிசைகள் வட்ட வடிவமானவை. விதானம் கூராக இல்லாமல் சட்டியைக் கவிழ்த்தது போல் மொட்டையாக இருக்கும். வளையக் கூடிய கிளைகளைப் பூமியில் உறுதியாக ஊன்றி அவற்றை வளைத்து மறு முனையையும் பூமியில் நடுவார்கள். இப்படி வட்டமாகப் பல கிளைகளை வளைத்து நட்டுக் கூடை முடை-





பது போலக் குறுக்காகவும் பல கிளை
ளைச் செலுத்திக் குடிசையின் கூடு
தயாரிப்பார்கள். இது ஸுலூ ஆண்
களின் வேலை. இதன்மீது வைக்கோல்,
புல், இலைகளைக் கொண்டு மழை நீர்
உள்ளே புகாதபடி வேய்வது பெண்
களின் வேலை.

இக்குடில்களுக்கு ஜன்னல்கள் ஏதும்
கிடையாது. உள்ளே செல்ல இரண்
டடி உயரத்தில் ஒரு துவாரம் மட்டுமே
உண்டு. இதன் மூலம் தவழ்ந்தபடி
தான் உள்ளே செல்லுவார்கள்.

உணவு :

ஸுலூக்கள் தங்கள் நிலத்தை, உழுது பயிரிடுவதற்கும் கால்நடைகளை மேய்ப்பதற்கான மேய்ச்சல் நிலங்களாகவும் பயன்படுத்துகிறார்கள். ஆண்கள் உண்பதும் இந்த வேளைகளில்தான். கால்நடைகளே ஸுலூக்களின் செல்வம். பெண்களைக் கொள்ளப் பரிசம் போடுவதற்கு 'லோபோலோ' என்று பெயர். இதற்கு இளைஞன் பெண்ணின் தந்தைக்குப் பரிசப் பொருளாகக் கால்நடைகளைத்தான் கொடுக்க வேண்டும். பெண் மக்கள் கால்நடைகளை வளர்ப்பதையோ, வைத்துக் கொள்ளுவதையோ ஸுலூ இனம் தடை செய்திருக்கிறது. சோளம், கம்பு, கேழ்வரகு ஆகியவற்றை உணவுக்காக மட்டுமல்லாமல் 'பீர்' தயாரிக்கவும் பயிரிடுகிறார்கள்.

பறங்கி, பட்டாணி, அவரை, பீன்ஸ் ஆகிய காய்கறிகளையும் விளைவிக்கிறார்கள்.



கால்நடைகளை மேய்ச்சலுக்கு அழைத்துப்போவார்கள். பெண்கள்தான் விளைச்சலைக் கவனிப்பார்கள். உழுது பயிரிடுவது தரக் குறைவான காரியம் என்பது ஆப்பிரிக்க மக்களின் எண்ணம். ஆகவே அதைப் பெண்களிடம் ஒப்படைக்கின்றனர். ஆடு மாடுகளைப் பராமரித்து அதன் பாலை உணவாகப் பயன்படுத்துவார்கள். பாலைப்புளிக்க வைத்தும் அருந்துவதுண்டு. கல்யாணம் அல்லது ஈமச் சடங்கு ஆகிய வேளைகளில் மட்டுமே விருந்துணவுக்குக் கால்நடைகளைக் கொல்கிறார்கள். பன்றி இறைச்சி

உடை :

பிராணிகளின் தோல்தான் - முக்கியமாக மாடு, மான் இவைகளின் தோலே இவர்களின் பிரதான ஆடை. ஆடை என்பது ஆடம்பரமாக ஏதுமிருக்காது. ஆண்கள் இடையைச் சுற்றி முன்னும் பின்னும் முழங் கால் வரை தொங்குமாறு அணிந்திருப்பார்கள். பெண்களும் தோலாலான 'ஸ்கர்ட்' மட்டுமே அணிந்திருப்பர். போர்வீரன் வேங்கையின் தோலை மார்பில் அணிந்திருப்பான். பூசாரியின் மேலுடையில் பறவைகளின்

வண்ண இறகுகள் இடம் பெற்றிருக்கும். இவ்வித உடைகளிலிருந்து இவர்களை யார் யாரென்று இனம் புரிந்து கொள்ளலாம். இளம் பெண்கள் தலை முடியை ஒட்ட வெட்டிக் கொண்டிருப்பார்கள். திருமணமான பிறகுதான் தலைமுடியை நீளமாக வளர்த்துக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். சிவ்ச் சிங்காரிப்பதெல்லாம் திருமணமான பெண்களுக்குத்தான். கோபுரம் போல நீளமாக இருக்கும் இவர்களின் தலைக்கொண்டை.

வீரமிக்க வேட்டைக்காரர்கள்

வேட்டையாடுதல் ஸுலூக்களின் தனிச் சிறப்பு. சிறு வயது முதலே இதில் பழக்கப்படுத்தப்படுகின்றனர். கால்நடைகளை உணவுக்காகக் கொல்வதில்லையாதலால் உணவுக்குக் காட்டு மிருகங்களையே வேட்டையாடுகின்றனர். மான் இறைச்சி மிகவும் பிடித்தமான உணவு இவர்களுக்கு. ஈட்டியையும் 'யூசா' (Uisa) என்ற ஒரு வகை ஆயுதத்தையும் வேட்டைக்கு உபயோகிக்கின்றனர். ஓர் உறுதியான கழியின் ஒரு முனையில் உருண்டையான கனமுள்ள ஒரு பொருள் பொருத்தப்பட்டிருக்கும். இதைத் தக்க முறையில் வேகமாகச் சுழற்றி வீசுவார்கள், மின்னல் வேகத்தில் பாய்ந்தோடும் மான்களின் கால்களை இது தாக்கி அதை வீழ்த்திவிடும். இந்த 'யூசா' ஆயுதம் பார்க்க ஏதோபோல் இருந்தாலும் மிக்க சக்தி வாய்ந்தது. வேட்டைக்குக் கூட்டமாகக் கிளம்பிக் காட்டு மிருகங்களை வளைத்துக் கொண்டு மெள்ள மெள்ள வட்டத்தை நெருக்கிச் சூழ்ந்து கொள்ளுவார்கள். குறிப்பிட்ட தூரம் நெருக்கியானதும் ஈட்டிகளை வீசுவார்கள். ஈட்டியின் குறி தப்பும்போது, 'யூசா'வை உபயோகிப்பார்கள். இவர்களின் குறிக்கு எந்த மிருகமும் தப்புவதில்லை.

பூசாரி

ஸுலூக்களிடையே அதிக மதிப்புடையவன் இவர்களின் பூசாரி. தலைவனுக்கும் மேலான கௌரவம் இந்த மந்திரவாதிக்கு உண்டு. வியாதிகளைக் குணப்படுத்தும் சக்தியும், நல்ல திடகாத்திரமான மனிதனை மரணமடையச் செய்யும் சூனியக்காரத்தனமும் இவனுக்கு உண்டு. மழை இல்லாதபோது இந்தப் பூசாரிகள் மந்திரம் ஜபித்து மழை வரவழைப்பார்கள் என்ற நம்பிக்கை இவர்களிடையே உண்டு. பயிர்கள் நன்கு விளைய, பூச்சி விழாதிருக்க இதற்கெல்லாம்கூட இந்த மந்திரப் பூசாரிகளுக்குத் திறமை இருப்பதாக நம்புகிறார்கள் ஸுலூக்கள். வரப் போவதை அறிந்து சொல்லும் ஆற்றலும் பூசாரிகளுக்கு இருப்பதால் இவர்களைக் கலக்காமல் தலைவன் எந்த முடிவையும் எடுக்கமாட்டான். இந்தப் பூசாரிகள் வசிக்குமிடம் மர்மங்கள் நிறைந்தது. இவர்களிடம் மக்களுக்குப் பயமும் பக்தியும் உண்டு. மான் கொம்புகளில் மந்திர சக்தியும் வைத்திய சக்தியும் கொண்ட மூலிகைகளை வைத்திருப்பார்கள். பாம்புக் கடியின் விஷத்தை முறிப்பதற்கும் இந்த மந்திரப் பூசாரிகளிடம் மருந்து உண்டு.

சமச் சடங்கு


ஒரு காலத்தில், தலைவர்களையும், முக்கியமான மனிதர்களையுமே இறந்த பிறகு முறைப்படி புதைத்துக் கொண்டிருந்தார்கள். மற்றவர்கள் இறந்தால் சடலத்தைப் புதர்களில் தூக்கிப் போட்டு விடுவார்கள். ஆனால் இப்போது எல்லோரையும் புதைக்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. கால் கைகளை உடலோடு சேர்த்து மடக்கி வைத்து உட்கார்ந்துள்ள நிலையில் நாலடி ஆழமுள்ள குழிக்குள் சடலத்தை வைத்துப் பக்கங்களிலும் மேலாகவும் கற்களை வைத்து மூடுவார்கள். இறந்தவரின் முகம் அவன் வாழ்ந்த குடிசையின் பக்கமாக அதைப் பார்த்துக் கொண்டிருக்குமாறு வைத்துப் புதைப்பது வழக்கம்.

கடவுள் :

ஸுலூக்களுடைய கடவுளின் பெயர் 'உங்குலுங்குலு'. அதாவது மிக மிகப் பழைமையானவர் என்று பொருள். எல்லா மிருகங்கள், பறவைகள், நீர் நிலைகள், மலைகள், சூரியன், சந்திரன் இவைகளை உண்டாக்கியவர் இந்த உங்குலுங்குலுதானாம்! முன்னோர்களைப் போற்றி வணங்குவது இவர்களுடைய மதத்தின் முக்கிய அம்சம். இறந்தவர்களின் கண்காணிப்பில்தான் உயிருள்ளவர்கள் வாழ முடியும் என்ற நம்பிக்கையில் அவர்களைத் திருப்திப்படுத்தி வழிபட மூதாதையர்களுக்கு ஆடுமாடுகளை வெட்டிப் படையல் கொடுக்கிறார்கள்.

ஸுலூக்கள் மதச் சடங்கின்போது நடனமாடுவது வழக்கம். வீரர்கள் பிறை வடிவமாக நின்று யுத்தகளத்தில் புரியும் சாகஸங்களை விளக்கும் வகையாக ஆடுவார்கள். பூமியை உதைத்தும், கூச்சலிட்டும், தம்பட்டைகளை அடித்தும் ஆடும் ஸுலூக்களின் இந்த நடனம் ரொம்பப் பிரசித்தமானது.

— கிருஷ்ணவேணி



லே
ாலு!
ற்பனை:
வாணடு
த்திரம்:
சலம்
இன்னிக்குப் பிரமாதமான 'ஃபுட்பால் மாட்ச்'. ரயில்வே அணியும் காவேரி மில்லும் மோதப் போறாங்க. இதை 'மிஸ்' பண்ணக்கூடாது.
ஏய், பாலு! கொஞ்சம் இங்கே வா. இந்தக் குமுட்டியைக் கொஞ்சம் விசிறு.
இதோ வந்துட்டேம்மா...
முட்டி கணகணன்னு ரியுது. வெந்நீர்த் வலைக்குத் தண்ணீர் ராப்பியாச்சு. போதுமா?
நான் இந்தப் பாத்திரங்களைக் கழுவறதுக்குள்ளே நீ ஓடிப் போய் இந்த லிஸ்டிலுள்ளபடி சாமான்களை வாங்கி வருவியாம், என்ன?
தங்கம் மளிகை எத்தனை தூரம் இருக்கு? ஓடினால் தான் சீக்கிரம் திரும்ப முடியும். இன்னி 'மாட்'சுக்குப் போக எத்தனை தடைகள்?
அ... அ... புஸ்... உஸ்... ம்... இதோ. ஸ்... உஸ் உன் லிஸ்ட் படி ... அப்பாடி ...! அம்மா. அ... அ... எல்லாம் சரியா இருக்கா பாத்துக்கோ. இனிமேயாவது ஆளைவிடு.
பாலு, நீ சமத்தில்லே! அப்பாவோட புத்தக அலமாரியிலே ஒரே தூசி. போன வாரமே அப்பா கோபிச்சுண்டார். கொஞ்சம் கவனியேன்.
ஓகே... ஓகே...!
இன்னிக்குன்னு பாத்து அம்மா ஏன் இப்படி என்னை வேலை வாங்கறா? இந்த ரேட்டிலே போனா நான் மாட்சுக்குப் போனாப்பலத்தான். இதென்ன புத்தகம்?



மனோவசிய சாஸ்திரம் ...ஹ...ஹா! இப்போ எனக்கு வேண்டியது இது தான். அம்மாவை 'ஹிப்னடைஸ்' செய்துட்டா அப்புறம் எனக்கு இப்படியெல்லாம் வேலை கொடுக்கமாட்டா. மனோவசியம் ரொம்பச் சுலபம்தான் போலிருக்கே.
பரீட்சை செய்து பார்த்துட்டா என்ன? ஆ.. ஜிம்மி! ஐடியா...
ஏய், ஜிம்மி... வாடா இப்படி...
இப்போ நீ ஆழ்ந்த உறக்கத்திலே மூழ்கப் போகிறாய்... ஆழ்ந்த... உறக்...கத்திலே... என் கண்களையே பார்...ஏய் ..ஏய்... நாயே! பாருன்னு பார்...பார்...
என்னடா இது, ஜிம்மி ஓடிட்டுதே! என் முறையில் ஏதோ தவறு இருக்கணும்...
ஒரு வேளை என் பார்வை அதைப் பயமுறுத்தி இருக்கலாம். அம்மாவை 'ஹிப்னடைஸ்' செய்யறதுக்கு முன்னாலே இந்தக் கண்ணாடி முன்னாலே நின்னு பயிற்சி எடுத்துகிட்டா என்ன?
இந்தப் புத்தகத்திலே உள்ள படி, குறிப்பிட்ட ஒரு பொருள் மீது உன் பார்வையைக் குத் நிறுத்தி மெதுவாக ஆனால் உறுதியாக இப்படிச் சொல் வேண்டும்....
நீ இப்போது தூங்கப் போகிறாய்...நீ இப்போது தூங்கப்... போகி...றாய்... தூங்...க...போகி...தூங்க ...தூங்...க...ங்...க...ய்...
மூன்று மணி நேரத்துக்குப் பின்
ரயில்வே அணி என்னமா ஆடித்துப் பாத்தீங்களா? மூணு கோலு போட்டுட்டாங்க.
காவேரி மில் பிளேயர்களையும் குறை சொல்லப் படாது, மொத்தத்திலே நல்ல ஆட்டம். நம்ம பாலுப் பயதான் மாட்சுக்கு வரல்லே? அவசியம் வரப் போறதாகச் சொன்னானே எங்கிட்டே...ம்...
ஸ்...ஸ்...ஸ்... கொர்...ர்...

தெரியுமா?

283. 'எட்னு' என்ற மலை எங்குள்ளது?

284. ஐஸ்லாந்தின் தலைநகர் எது?

285. எதியோபியா எந்தக் கண்டத்தில் இருக்கிறது?

286. எதியோபியர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்கள்?

287. உலகில் மிக அதிகமான அலுமினியத்தைத் தயாரிக்கும் நாடு எது?

288. 1200ம் ஆண்டில் ரஷ்யாவின் தலைநகர் எது என்று தெரியுமா?

289. வட அமெரிக்காவில் உள்ள மிகப் பெரிய பெனின்சுலா எது?

290. உலகின் மிகப் பெரிய தீவு எது?

291. சான்பிரான்ஸிஸ்கோ எந்த நதிக் கரையில் உள்ளது?

292. உலகிலேயே பாதாம் பருப்பு உற்பத்தியில் முதன்மையாக இருக்கும் தேசம் எது?

293. நமது உடலில் இச்சைக்கு உட்பட்டு இயங்கும் தசை நார்கள் எவ்வளவு?

294. அபிஸால் மீன்கள் என்றால் என்னவென்று தெரியுமா உங்களுக்கு?

295. கிரீன்லாந்து எந்த நாட்டுக்குச் சொந்தமானது?

296. வட அமெரிக்காவின் தெற்குக் கடற்கரையில் ஒரு வளைகுடா இருக்கிறது. அதற்குப் பெயர் என்ன?

297. உலகின் மூன்றாவது மிகப் பெரிய நகரம் எது?

298. கிரீன்லாந்தின் தலைநகரத்தின் பெயர் என்ன?

299. பெரியம்மைத் தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்தவர் யார் சொல்லுங்கள்.

300. ருமேனியாவின் தலைநகர்?

301. மாண்டலே நகரம் எந்த நாட்டில் உள்ளது?

302. ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகம் 'மிட்ஸம்மர் நைட்ஸ் ட்ரீம்' என்பது. மிட்ஸம்மர் டே எப்போது என்று தெரியுமா?

303. பூச்சிகள் உலகின் முக்கிய இரு பிரிவுகள் எவை?

304. தென் அமெரிக்காவில் உள்ள ஒரே பிரிட்டிஷ் காலனி எது?

305. உலோகங்களிலேயே மிக விலை உயர்ந்த உலோகம் எது?

283. சிசிலியில். 284. ரேய்க்ஜவிக். 285. ஆப்பிரிக்கக் கண்டத்தில். 286. காப்டிக் கிருஸ்துவ மதத்தை. 287. ஐக்கிய அமெரிக்கா. 288. கீவ் (Kiev) 289. அலாஸ்கா. 290. கிரீன்லாந்து. 291. சாக்ரமெண்டோ நதிக்கரையில். 292. ஐக்கிய அமெரிக்கா. 293. 450. 294. ஆழ்கடலின் அடிமட்டத்திலே வாழும் மீன்கள். 295. டென்மார்க்குக்கு. 296. மெக்ஸிகோ வளைகுடா. 297. நியூயார்க். 298. காட்தாப். 299. எட்வர்டு ஜென்னர். 300. புகாரெஸ்ட். 301. பர்மாவில். 302. ஜூன் 24ந் தேதி. 303. இறக்கை உடையவை - இறக்கை இல்லாதவை. 304. பிரிட்டிஷ் கயானா. 305. பிளாட்டினம்.





'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக, ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: சதாசிவம்.

வாழ்வே ஆவலின் நிறைவேற்றம்



‘க்ளிக்’ அடித்துவைப்பீர்...நிரந்தரம்

எப்போதுமே உங்கள் கையோடிருக்கட்டும் தப்பாத் துணையான க்ளிக் III, மறைந்தோடும் வாழ்வின் மணியான கணங்களை நிரந்தரமாக்கிக் காப்பீர்-நினைவுமுகம் கண்முன் நிற்பதற்கே.

‘இலக்கு வைத்ததும் சடக்’ என எடுக்கவே ஆக்பா க்ளிக். காரியத் தகுதி வாய்ந்தது. உண்மை தவறாதது. கையாள எளிது. சிக்கனமிக்கது.

- 120 பிலிம் ரோல் ஒவ்வொன்றுக்கும் பெரிது பெரிதாக (6 x 6 செமீ.) படங்களைப் பெறுவீர்கள்.
- சிறப்பானதோர் தயார்த் தோலுறை, போர்ட்ரெய்ட் லென்ஸ், ஃப்ளாஷ்கன் ஆகியவை மேற்கொண்டு தனிவிலைக்குக் கிடைக்கும்.

தெள்ளத் தெளிவான பிரிண்டுகளுக்கும், என்லார்ஜ்மெண்டுகளுக்கும் கண்டிப்புடன் கோருவீர் ஆக்பா-கேவார்ட் போட்டோத் தாள்களை.

அனுமதிபெற்ற எல்லா ஆக்பா-கேவார்ட் விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்.

ஆக்பா-கேவார்ட் AG லீவர்குஸன் அவர்களின் கூட்டுறவோடு இவற்றைத் தயாரிப்போர்: தி நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்.

விலை
ரூ. 56.25
(எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. இதர வரிகள் தனி).



SIMOES-AG-10-TAM

ஏகபோக விநியோகஸ்தர்கள்:

ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்

பம்பாய் • நியூ டெல்லி • கல்கத்தா • சென்னை.

® புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட், ஆன்ட்வெர்ப்/ லீவர்குஸன் ஆகியோரின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.

ஆக்பா க்ளிக்—
இந்தியாவின் உன்னதப் புகழ்பெற்ற காமிரா.

REGISTERED NO. M. 9040


“‘ஜாக்கிரதையாகக் கையாளவும்’ என்று எழுதட்டுமா?”

“அவசியமில்லை. ஸதர்ன் ரோட்வேஸில்தானே அனுப்பப் போகிறோம்?”

பிரதி வருடமும் பல லட்சம் டன் எடையுள்ள பார்சல்களை ஸதர்ன் ரோட்வேஸ் சுமந்து சென்று சேர்க்கிறது. பார்சல்களை அது ஜாக்கிரதையாகக் கையாள்கிறது. ஒவ்வொருவரையும் தனி அக்கறையுடன் கவனித்து சேவை செய்கிறது. இதனாலெல்லாம்தான் அதனிடம் வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. பார்சல்களை ஏற்றுவது, எடுத்துச் செல்வது, இறக்குவது அனைத்தையும் விசேஷப் பயிற்சி பெற்ற ஊழியர்களே செய்கிறார்கள்.

ஆகவே உங்கள் பார்சல்களை ஸதர்ன் ரோட்வேஸ் நல்லபடியாகவும் பத்திரமாகவும் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் வியப்பில்லை.

வாடிக்கையாளர்களிடை வளர்ந்து வரும் நல்லெண்ணமும் நம்பிக்கையும்தான் தென்னகம் பூராவையும் தன் பார்சல் ஸர்வீஸினால் ஸதர்ன் ரோட்வேஸ் அரவணைக்கத் துணை புரிந்துள்ளது. தங்கள் பண்டங்களை அனுப்புவதற்கு மேன் மேலும் அதிக மக்கள் ஸதர்ன் ரோட்வேஸைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.



ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்

டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று

மதுரை

